# பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி சாள்ஸ் டிகால் காலமானார்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு


THE EELANADU

National Tamil Daily

போல் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 272
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 25 றமழான் 11 புதன்கிழமை (11-11-70)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

அன்டன்
வாளிகள்
அளவுகள் 7" முதல் 14" வரை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130

பாரிஸ், நவ.10 பிரான்ஸ் முன்னைநாள் குடியரசு ஜனாதிபதி ஜெனரல்சாள்ஸ் டிகால் இன்று காலமாகிவிட்டார்.

இம்மாதம் 22ந் திகதியுடன் இவருக்கு 80 வயது பூர்த்தியடைகிறது.

பாரிஸ் நகருக்கு கிழக்கே 100 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இவரது கிராம இல்லத்தில் மனைவியுடன் டெலிவிஷன் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த போது மாரடைப்பினால் இவர் மரணமானாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மரணத்தையொட்டி பிரான்ஸ் க்ட்டசபைக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்டிம் தலைவரான திரு. டிகால் 1958ம் ஆண்டு பிரான்சின் முதல் குடியரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஜெனரல் டிகால் 1944-ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரை பிரான்சின் பிரதமராகவும் கடமை பார்த்தவர் இவரது பூதவுடல் இவரது வீட்டுக்கண்மையில்நல்லடக்கம் செய்யப்படும். இவரது மரணச்சடங்கின் போது அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் கலந்துகொள்வார்.

# "மனச் சாட்சிப்படி வாக்களியுங்கள் என பள்ளிக்கு வெளியே கூறினேன்"

## மன்னார்தேர்தல்ஆட்சேபவழக்கில் அழகக்கோன் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன் மீரான்பள்ளிவாசலுக்கு முன்னால் நான் காரில் இருந்தேன் பள்ளியிலிருந்து ஆட்கள் வருவதாக என்னுடன் வந்தவர் கூறினார். நான் காரிலிருந்து கிழே இறங்கினேன். நான் அவர்களை வணங்கியபடி தாராக்குண்டுக்கு அதிக வேலைகள் செய்திருப்பதாகவும் உங்கள் மனச்சாட்சியின் படி வாக்களிக்கும்படியும் சொன்தேன் அவர்களிடம் கூட்டத்திற்கு வரும்படியும் கூறினேன், வரும்போது முகத்தை காட்டும்படி என்னிடம் கூறப்பட்டது. அதனால் அன்று பள்ளிக்குப் போனேன். எனது வீட்டிலிருந்து 12-45 மணிக்கு புறப்பட்டு பள்ளிக்கு போனேன் அந்த பள்ளியை லெப்பைவாடி மொஸ்க் என்றும் மீரான் ஜும்மா மொஸ்க் என்றும் அழைப்பார்கள் மற்றொரு பள்ளியும் அங்கு இருக்கிறது அதற்கு உசேனியா மொஸ்க் என்று பெயர் நான் காரில் அங்கு போனேன். என்னுடன் சாரதியும் நடராசாவும் வந்தார்கள். நடராசா எனது ஆதரவாளர் அவர் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்தவர் அவயன் மனைவிமன்னார் அஸ்பத்தி... காரில் ஏறி வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

நான் 42 வருட காலமாக புறக்டராக கடமையாற்றி வருகிறேன் பிரசித்த நொத்தாரிசாகவும் இருந்து வருகின்றேன். கடந்த காலத்தில் பதில் மாவட்ட நீதிபதியாகவும், பதில் மாஜிஸ்திரேட்டாகவும், கோரிக்கை கமிஷனராகவும் கடமையாற்றியிருக்கின்றேன்.

1947ம் ஆண்டு மன்னாரில் முதலாவது பட்டினசபை இயங்கியது. நான் தான் முதலாவது தலைவராகஇருந்தேன். 3 தடவை பட்டின சபை தலைவராக இருந்தேன். 3 வருடங்கள் கொண்டது ஒரு தடவையாகும். ... 5ம் வட்டாரா...

விநியோகிக்கவில்லை. மக்களை எனது பக்கத்திற்கு திருப்பவில்லை. மற்றவர்களுடன் சென்று எனக்கு ஆதரவு திரட்டவில்லை.

அழகக்கோன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: முஸ்லிம் பகுதிகளான எருக்கலம்பிட்டியிலும், தாராக்குண்டிலும் நான் இரண்டு கூட்டங்களை நடாத்த ஒழுங்கு செய்தேன். எருக்கலம் பிட்டியில் ஏ. எம். அப்பாபிச்சையுடன் உதவி பெற்றேன். அவர் எனது நியமனப்பத்திரத்தில், பிரேரிப்பவராக கையெழுத்திட்டவராகும்.

அவருக்கு நான் போண் பண்ணினேன் அவர் என்னை [illegible]ட்டில் வந்து சந்தித்தா[illegible] பிரசாரக் கூட்டங்கள் ஒழுங்கு செய்வதுபற்றி நான் அவருடன் கதைத்தேன் கூட்டம் நடத்துவதென்றும் அவர் தலைமை தாங்குவதென்றும் முடிவு செய்ய[illegible]பட்டது.

மற்ற[illegible] கூட்டத்தில் கபீர்



மன்னார் தேர்தல் ஆட்சேப



## வடபகுதியில் கள்ளக்கடத்தலைத் தடுக்க கூட்டு நடவடிக்கை

### அரசாங்கஅதிபர் மகாநகட்டில் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குப் புதிய முறைகள் கையாளப் படவிருக்கின்றன. கடத்தல் வேட்டையில் பொலிசாருடன் சுங்கப்பகுதி, இராணுவம், கடற்படையினரும் கூட்டாக இயங்குவர். பிரஸ்தாப நான்கு பகுதியினை[illegible]யும் யாழ் அரசாங்க அதிப[illegible] நேற்றுக்கூட்டி ஆலோசனை நடத்தினார்.

யாழ். அரசாங்க அதிபர் [illegible]மல் அமரசேகரா கூட்[illegible] இம் மாநாட்டில், வ[illegible] பகுதி பொலிஸ் அதிபர், சுங்[illegible] அதிகாரி, கடற்படை அதி... கொள்ளமுடியாதிருப்பதாக ஏற்கனவே கருத்து நிலவியது. இதை முறியடிக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற மாநாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன.

கள்ளக்கடத்தல் ஒன்றை முதலில் அதிகாரிகள் கண்டு பிடித்ததும் அதை எப்படி விசாரணை செய்யவேண்டும் எந்தவிதமான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என்பது பற்றிய விதிகளைத் தயாரிப்பதில் அரசாங்கஅதிபர் ஈடுபட்டுள்ளார். இவ்வித விதிகள் ஏற்கனவே நடைமுறையில் இல்லாமலி...

## '3 காயங்களும் கல்லெறி மூலம் ஏற்பட்டிருக்கலாம்'

### தேர் எரிப்பு வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், செவ்வாய் மாவிட்டபுரம் ஆலய தேர் எரிப்பு வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட் திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றச் சாட்டுக்கள் எதிரிகளுக்கு வாசித்துக் காட்டப்பட்டன.

இதன்பின்னர் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் திருமதி ஜோசப் சாட்சியமளித்தார். செல்லப்பா சண்முக வடிவேலுவின் உடம்பில் 3 காயங்கள் இருந்தன. அவை முதுகிலும், இடது பக்க நெஞ்சிலும், முழங்காலிலும் இருந்தன. காயங்கள் உரைஞ்சலாலும், கல்லெறியாலும் ஏற்பட்டிருக்கலாம் என்று சாட்சியமளித்த டாக்டர் கூறினார். சாட்சியை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆர். ஜி. செல்வரத்தினம் குறுக்கு விசாரணை வசய்தார்.

இவ்வழக்கில் தேர்களை எரித்து 20,000 ரூபா சேதம் விளைவித்ததாகவும், சண்முகவடிவேலு ஐயருக்கு காயமேற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி மூவருக்கு எதிராக இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபை சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு
14 Z 0656 84,510

2-ம் பரிசு
01 E 0751 33,804

3-ம் பரிசு
24 J 0174 8,451

தலா ரூபா 422-55 சதம்

## கணக்காளர் நாடு திரும்பினார்

யாழ்ப்பாணம், புதன் யாழ். மாநகரசபையின் கணக்காளராகக் கடமையாற்றி கொழும்புத் திட்டத்தின்கீழ் புலமைப் பரிசில் பெற்று லண்டனில் ஏ. சி. சி. ஏ. பட்டம் பெறுவதற்காக லண்டன் சென்றிருந்த திரு. வே. தங்கவேலு தாயகம் திரும்பியுள்ளார். இரு வருடங்கள் லண்டனில் பயிற்சி பெற்று பரீட்சையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி வாக்களிக்கும்படியும் சொன்னேன் அவர்களிடம் கூட்டத்திற்கு வரும்படியும் கூறினேன்.



மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் நேற்று சாட்சியமளித்த எதிர் மனுதாரரும் மன்னார் எம். பி. யுமான புறக்டர் வி. ஏ. அழகக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் 19-வது தினமாக விசாரணை செய்யப்பட்டது விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டில் ஏராளமானோர் வந்திருந்தனர்.

எதிர் மனுதாரன அழகக்கோன்மேலும் கூறியதாவது:-

தாராக்குண்டுப்பகுதிக்கு நானோ எனது ஆதரவாளர்களோ வருவதில்லையென்றும் ஆதலால் தொழுகை முடிந்து வெளியால் என்று பெயர் நான் காரில் அங்கு போனேன். என்னுடன் சாரதியும் நடராசாவும் வந்தார்கள். நடராசா எனது ஆதரவாளர் அவர் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்தவர் அவயன் மனைவிமன்னார் ஆஸ்பத்திரியில் அற்றெண்டனாக கடமையாற்றுகிறார். அவர் கிளிநொச்சிக்கு சென்றுவிட்டு தேர்தல் சமயம் மன்னாருக்கு வந்தார், மன்னாரிலிருந்து மூன்றரை அல்லது நான்கு மைல்தூரத்தில் பள்ளிஇருக்கிறது ஒருமணியளவில் பள்ளி போனேன்.

## பனமட்டையால் அடைக்கப்பட்டவேலி

பள்ளிக்கு சிறிது முன்னால் கார் நிறுத்தப்பட்டது சாரதியும் நடராசாவுப் காரிலிருந்து இறங்கினார்கள் பள்ளி வளவு வேலிப ம் மட்டையால் அடைக்கப்பட்டிருந்தது. அதனை சுலபமாக காணக்கூடியதாயிருந்தது 10 அல்லது 15 நிமிடத்திற்குபின். சாரதி அல்லது நடராசா ஆட்கள் வெளியில் வருவதாக கூறினர். நான் காரிலிருந்து இறங்கி அவர்களை வணங்கினேன். அதன் பின் முதலாவது பட்டினசபை இயங்கியது. நான் தான் முதலாவது தலைவராகஇருந்தேன், 3 தடவை பட்டின சபை தலைவராக இருந்தேன். 3 வருடங்கள் கொண்டது ஒரு தடவையாகும். மன்னாரில் 5ம் வட்டாரமான சின்னக்கடை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டேன்,

1952ல் நான் ஆட்சிமன்ற தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு தோல்வியடைந்தேன். அத் தடவை என்னுடன் சிற்றம்பலம் போட்டியிட்டார். 1956ம் ஆண்டு தமிழரசுக் கட்சி அபேட்சகராக போட்டியிட்டு வெற்றி பெற்றேன். 60ம் ஆண்டு நடந்த இரு தேர்தல்களிலும், தமிழரசு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். 1965ம் ஆண்டுத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். கடந்த தேர்தலிலும் தமிழரசு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். இதுதான், எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது தேர்தல் ஆட்சேப மனுவாகும்.

நான் ஒரு ரோமன் கத்தோலிக்கர் தேவாலய நடவடிக்கைகளில் எனக்கு ஈடுபாடு உண்டு. இலங்கை கத்தோலிக்க யூனியனில் அங்கத்தவராக இருக்கிறேன்.

## வீட்டுக்குவீடு ஆதரவு தேடவில்லை

கடந்த தேர்தலில் சுகவீனம் காரணமாக தான் தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. தகுதியான அபேட்சகர் உள்ளூரில் இல்லாததால் என்னையே போட்டியிடும்படி கட்சி வற்புறுத்தியது அதனால் போட்டியிட்டேன். கடந்த தேர்தலில், நான் வீட்டிற்கு வீடு ஆதரவு தேடப் போகவில்லை. ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று துண்டுப்பிரசுரம்

… பிரசாரக் கூட்டங்கள் ஒழுங்கு செய்வதுபற்றி நான் அவருடன் கதைத்தேன் கூட்டம் நடத்துவதென்றும் அவர் தலைமை தாங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மற்றக்கூட்டத்தில் கபீர் தலைமைதாங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மனுதாரின் அட்வகேட் இசடீன் முகமட் குறுக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த அழகக்கோன் கூறியதாவது:

3 தடவை பட்டணசபைத் தலைவராக இருந்தேன். இரண்டுதடவை தொடர்ச்சியாக இருந்தேன். பின் 1956ல் நான் ஆட்சிமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டபின் தான் தலைவராக இருக்கவில்லை, வேறு ஒருவர் தலைவரானார்!

வழ: 3-வதுதடவை எப்பொழுது தலைவராக இருந்தீர்? நான் எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டபோது

(4-ம் பக்கம் பார்க்க)

## கைவினைக் கழக பொருட்காட்சி

யாழ்ப்பாணம், புதன்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கைவினைக்கழக முதலாம் ஆண்டுவிழாவும், பொருட்காட்சியும் இன்று கலாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன, வடமாநில வித்தியாதிபதி திரு. வை. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவை ஆரம்பித்து வைப்பார்.

திரு. ஏச். எஸ். ஹன்டி பேரின்பநாயகம், திரு. ஏ. தியாகராசா எம். பி., திரு. நா. கதிர்காமநாதன் ஆகியோர் உரையாற்றுவர். பொருட்காட்சி 12-ந் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்குத் திறந்திருக்கும்.

யும் யாழ் அரசாங்க அதிபர் நேற்றுக்கூட்டி ஆலோசனை நடத்தினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கூட்டிய இம் மாநாட்டில், வடபகுதி பொலிஸ் அதிபர், சுங்க அதிகாரி. கடற்படை அதிகாரி, ராணுவ அதிகாரி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொலிஸ், ராணுவம், சுங்க, இலாகா, கடற்படை ஆகியவற்றுக்கிடையே ஒற்றுமை நிலவாததால், கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளைச்சுலபமாகச்செய்து விசாரணை செய்யவேண்டும் எந்தவிதமான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என்பது பற்றிய விதிகளைத் தயாரிப்பதில் அரசாங்கஅதிபர் ஈடுபட்டுள்ளார். இவ்வித விதிகள் ஏற்கனவே நடைமுறையில் இல்லாமலிருந்ததினால் அதிகாரிகளுக்கிடையேகுழப்பநிலைஇருந்து வந்தது. அரசாங்க அதிபரின் இந்த முயற்சி கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்குபெரிதும் உதவுமெனநம்பப்படுகிறது"

இலங்கை - இந்திய

# ஒப்பந்தம் மதித்து செயல்படுத்தப்படும்

புதுடில்லி, நவ. 10

இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர்கள்சம்பந்தமாக 1964-ம் ஆண்டு செய்து கொண்டஉடன்படிக்கையை இருநாடுகளுமே மதித்து செயல்படுவதற்கு உறுதி பூண்டிருக்கின்றனவென்று இன்று இந்திய மக்கள்பிரதிநிதிகள் சபையான லோக் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர்களைப் பாதிக்கும் விதத்தில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக லோக்சபையில் பல அங்கத்தவர்கள் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

ஒப்பந்தம் செயல்படுத்தப்படும்போது ஏற்படும் இன்னல்களைத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று திரு. சுவரிண்சிங் தெரிவித்தார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு பெனர்ஜி இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்னையைக் கிளப்பினார்.

ராஜ்ய சபையிலும் பல உறுப்பினர்கள் இதுபற்றிய கேள்விகளை எழுப்பினார்கள்.

# அண்ணா சிலைக்கு பாதுகாப்பு!

சென்னை நவம் 10

தமிழக முன்னாள் அமைச்சர் சி என். அண்ணாத்துரையின் சிலையைப் பாதுகாக்கப் தமிழக அர்சாங்கம் பொலிசாரை நியமித்துள்ளது

பாரதத்தில் ஆங்காங்கு தேசியத்தலைவர்களின் சிலைகளை நாசமபக்கும் வேலைகளில் நக்ஸல்பாரிகள் இறங்கியுள்ளமையைத் தொடர்த்து சென்னை மௌன்ட் வீதியில் அமைந்துள்ள அண்ணாவின் சிலை பாதுகாவல் செய்யப்பட்டுள்ளது.

## மூடப்படவில்லை

மன்னார், செவ்வாய்

ஜனாப் எஸ். எச். எம். லாபீர் தலைமையில் இயங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார்க்கிளை மூடப்படவில்லையென்றும் இக்கிளை மூடப்பட்டதாக வெளிவந்தசெய்தி தவறென்றும் இந்தக்கிளைத்தலைவரும் செயலாளரும் அறிவிக்கின்றனர்.

## தமிழ்நாட்டில் ஒரே நிர்வாகத்தில் சகல ஆலயங்களும் இயங்கும்.

சென்னை நவ 10

தமிழகத்திலுள்ள ஆலயங்களின் சிப்பந்திகளைஒரேநிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையில் கோவில் பூஜகர்கள் அடங்கமாட்டார்கள். ஆலயங்களை நிர்வகிக்க உதவிக்கலக்டர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்

தமிழகத்தில் 13500 ஆலயங்கள் உள்ளனவென்பது குறிப்பிடத்தக்கது.

வருமாறு:

1-ம் பரிசு

14 Z 0656 84,510

2-ம் பரிசு

01 E 0751 33,804

3-ம் பரிசு

24 J 0174 8,451

தலா ரூபா 422-55 சதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 03 X 0465 | 26 G 0261 | | |
| 29 W 0174 | 23 Z 0243 | | |
| 16 K 0288 | 22 U 0087 | 04 R 0213 | 14 T 0239 |
| 11 F 0386 | 22 O 0422 | 01 V 0315 | 16 F 0870 |
| 31 T 0232 | 36 D 0542 | 18 H 0[illegible]62 | 01 M 0475 |
| 17 X 0771 | 25 B 0287 | 16 X 0130 | 15 Q 0005 |
| 06 S 0844 | 21 N 0327 | 11 R 0920 | 32 R 0665 |
| 19 Z 0302 | 05 H 0345 | 23 T 0928 | 31 N 0150 |
| 04 E 0610 | 03 N 0158 | 25 M 0322 | 09 S 0311 |
| 22 Q 0598 | 32 J 0511 | 11 W 0743 | 07 F 0628 |
| 34 N 0395 | 32 B 0483 | 30 L 0241 | 09 K 0145 |
| 15 Z 0051 | 21 H 0486 | 01 P 0764 | 30 Q 0170 |
| 30 H 0001 | 29 J 0044 | 02 N 0009 | 18 K 0510 |
| 30 M 0422 | 23 X 0557 | 26 H 0986 | 09 G 0879 |
| 18 T 0834 | 25 P 0384 | 29 Y 0[illegible]00 | 28 V 0550 |
| 24 H 0390 | 12 S 0751 | 38 N 0599 | 08 H 0576 |
| 18 X 0811 | 12 D 0637 | 01 E 0553 | 23 P 0237 |
| 13 Z 0499 | 20 Y 0397 | 15 J 0235 | 29 O 0762 |
| 02 A 0175 | 22 W 0[illegible]56 | 05 H 0299 | 23 R 0109 |
| 37 E 0612 | 35 U 0535 | 33 X 0224 | 11 D 0234 |
| 20 W 0482 | 27 L 0384 | 05 P 0171 | 07 J 0769 |
| 02 U 0259 | 36 Z 0169 | 29 O 0384 | 04 Z 0127 |
| 11 W 0768 | 31 G 0547 | 09 X 0806 | 13 X 0286 |
| 31 L 0426 | 07 W 0645 | 01 O 0358 | 31 O 0201 |
| 30 Q 0005 | 29 Q 0477 | 02 J 0143 | 05 L 0326 |
| 13 O 0912 | 17 W 0276 | | |
| 01 L 0459 | 31 D 0431 | | |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

சில் பெற்று லண்டனில் ஏ. சி. சி. ஏ. பட்டம் பெறுவதற்காக லண்டன் சென்றிருந்த திரு. வே. தங்கவேலு தாயகம் திரும்பியுள்ளார். இரு வருடங்கள் லண்டனில் பயிற்சி பெற்று பரீட்சையில் தேறிய அவர் மீண்டும் மாநகரசபை கணக்காளராகக் கடமையாற்றுகிறார்.


வெளிவந்துவிட்டது!

'ஈழநாடு'

மாதாந்தக் கலண்டர் 1971

விற்பனையாளர்களும் வியாபார ஸ்தாபனங்களும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கலண்டர் ஒன்றின் விலை
75 சதம் மட்டும்
விற்பனையாளர்களுக்கு கழிவு உண்டு.

'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


# யாழ். ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

## அத்தியாவசிய மருந்து வாங்குவதற்கு வைத்திய சுப்பிரின்டனுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது' டாக்டர்களினால் எழுதிக் கொடுக்கப்படும் சில ஊசி மருந்துகளும், குளிகை வகைகளும் நோயாளிகளுக்கு வழங்கப்படுவதில்லையாம் மருந்துச்சாலைகளில் இந்த மருந்து இல்லை, டாக்டரிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று கூறப்படுகிறதாம்.

பென்சிலின் ஊசிக்கு எழுதப்பட்ட பல நோயாளிகளுக்கு பென்சிலின் போன்ற வேறு ஊசி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில்நேற்று ஏற்றப்பட்டது. வார்ட்டுகளில் உள்ள நோயாளிகளுக்கும்ஒழுங்காகமருந்து கொடுப்பதில் கஷ்டம் இருப்பதாகவும் தெரிகிறது.

இதுபற்றி யாழ். மாவட்ட வைத்திய சுப்பிரின்டனிடம் கேட்டபோது, பெருமளவில் மருந்து தட்டுப்பாடு இருக்கவில்லையென்றும், தட்டுப்பாடு ஏற்படும் அத்தியாவசியமான மருந்து வகைகளை தனியார் ஸ்தாபனங்களிடம் வாங்குவதற்கு ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரின்டனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். (கு வி ம)

# வடபகுதி பஸ் சேவை சீர்கேடு: தினம் 25 பஸ்கள் பழுது

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி பஸ்சேவைகள் கடந்த சில தினங்களாக மிகவும் சீர்கேடான நிலையில் இயங்கி வருவதாக பிரயாணிகள் குறைகூறுகின்றனர், பஸ்களுக்குப் பலமணிநேரம் காத்துநிற்கும் நீண்ட கியூவை நாளாந்தம் யாழ். பஸ்நிலையத்தில் காணக்கூடியதாகவிருக்கிறது. சகலபகுதிகளுக்கும்பஸ் சேவைசீராக நடைபெறவில்லை.

குறிப்பிட்ட வேளைக்குரிய பஸ்கள் அந்தந்த நேரங்களில் சேவையில் ஈடுபடாததால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். மழை தொடர்ந்து பெய்த வண்ணமிருக்க, நீண்ட கியூவில் பிரயாணிகள் காத்து நிற்பதையும், குழந்தைகளுடன் காணப்படும் தாய்மார்கள் கியூவின் நடுவில் கீழே உட்கார்ந்திருப்பதையும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் காணக்கூடியதாயிருக்கிறது. பல பஸ்கள் பழுதடைந்திருப்பதனால் சேவையைத் திறம்படநடத்த முடியாதிருப்பதாகவும் நாளாந்தம் சுமார் 25 பஸ்கள் பழுதடைந்தும், உதிரிப்பாகம் இல்லாமலும் இருப்பதால் சேவையில் சீர்கேடு ஏற்படுவதாகவும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் கூறினார். ஒரு வாரத்துக்குள் சீராகும் என்றும் அவர் சொன்னார்.

(கு. வி.ம.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முல்லைத் தீவிலிருந்து 14 3/4 மைல் தெற்கே கொக்குத்தொடுவாயில் 25 ஏக்கர் தென்னை, 5 ஏக்கர் முந்திரி தோட்டப் விற்பனைக்கு உண்டு இத் தோட்டம் வரை வாகனங்களில் செல்லலாம். இத் தோட்டத்திற்கு முக்கிய எல்லையாக ரோட்டும் கடலும் உண்டு. 6லிருந்து 10 ஆண்டுவரை பயிரிடப்பட்ட இச் செடிகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளன. அரசாங்கம் கையளித்த சொந்த உறுதி உண்டு. விலை ரூபா 60,000/- அல்லது விலை குறிப்பிடலாம். பார்வையிடுவதற்கும் விலை நிர்ணயிப்பதற்கும் தொடர்புகொள்ளவும்: விளம்பர இலக்கம் 2505, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2505

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 12—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 திரைகானம்,

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி.

இரவு 6-15 வாத்திய இசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-25 பேச்சு, 9-30 வைத்தியம், 9-40 பாட்டு— சரஸ்வதி பாக்கியராசா, 10-30 செய்தித் தொகுப்பு.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 25-ந் திகதி (11-11-70)

மேஷம்- கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமான உடை அணிவதற்கு விரும்புவீர்கள்.

ரிஷிபம்- எதிலும் அவசரக்கோலம் தென்படும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. மனத்திடம் மருந்தாகும்.

மிதுனம்- புதுமையான அனுபவங்கள் கிடைக்கக் கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் புதிய சாதனையை உருவாக்குவார்கள்

கடகம்- உடல்நலத்தில் துரித முன்னேற்றம் காணப்படுகின்றது. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள்.

சிம்மம்- திடீர்தாக்குதல் உங்களை திகைக்கவைக்கலாம். நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும்

கன்னி- பயன்தரும் திட்டங்களில் கவனம்செலுத்தப்படும். நீண்டநாள் மூடுமந்திரமாக இருந்த ஒரு உண்மை இன்று அம்பலத்துக்கு வரலாம்.

துலாம் எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். எச்சரிக்கை நன்று.

விருட்சிகம்- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்றுவாழ்க்கையைநடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

தனுசு- கடமை ஆற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று கழும்?

மகரம்- மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும்.

கும்பம்- குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

மீனம்- கண்டுடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல்நலனும் சிறிது பாதிக்கப்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# "இந்தச்சபையில் எந்த விதமான அதிகாரமும் எனக்கில்லை"

# சபைச்செயலாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம் புதன்

'நான் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலப்பிரதி என்னிடம் திரும்பி வந்ததுபற்றி நல்லாய் சொல்ல முடியாது. வேறு யாருக்கும் அனுப்பப்பட்டதா அல்லது தலைவர் வைத்திருந்தாரா என்பது பற்றியும் தெரியாது'

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில், நீதியரசரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது சாட்சியமளித்த மன்னார் பட்டின சபைச் செயலாளர் வெற்றிவேலு மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

மனுதார்சார்பில் ஆஜரான அட்வகேட் இஸ்டீன் முகமட் சாட்சியமளித்த வெற்றிவேலுவை குறுக்கு விசாரணை செய்தார்

வழ: சபையில்முன்புரென்டர் எடுத்தவர்களின் பட்டியல் இருக்கிறதா? பட்டியல் இல்லை பைல் இருக்கிறது.

வழ: ரென்டர் எடுப்பவர் இறைச்சி வியாபாரியென சபைக்கு திருப்தியளிக்கும் பொறுப்பு யாருடையது? தலைவருடையதும் சபையினுடையதும்.

வழ: விண்ணப்பகாரர் தகைமையை நிருபிப்பது கடமை? ஆம்.

வழ: அமைச்சிலிருந்து கடிதம் வந்ததா? கமிஷனரிடமிருந்து தந்திவந்தது.

வழ: கடிதங்கள் யாருக்கு வருவது? தலைவர்பார்த்து விரும்பினால் எனக்கு அனுப்புவார் அல்லது வைத்திருப்பார்.

வழ: வைப்புப்பணத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தலைவர் அனுப்பிய துண்டுதான் இது? ஆம்.

வழ: இதுதலைவர் விரும்பினார்: அதனால் அனுப்பினார்? ஆம்.

வழ: சில வேளை சிலர்நேரடியாக தலைவரிடம் போகலாம்?- இருக்கலாம்.

கொள்ளமுடியுமா? அப்படிக் கட்டவேண்டுமானால் கோர்ட்டின் உத்தரவு எடுக்க வேண்டும்

வழ: அந்தமாதிரி நிலையில் மணிஓடர் அனுப்பினால் ஏற்றுக் கொள்வீரா? அப்படி இது வரைக்கும் ஒருவிஷயமும் நடைபெறவில்லை.

நீதி: வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது ஒருவரும் பணத்தை மணிஓடர் மூலம் அனுப்பவில்லையா? அதுபற்றி எனக்குத் தெரியாது ஞாபகமில்லை.

நீதி: மணி ஓடர் அனுப்பப்பட்டிருந்தால் என்ன நடக்கும்?- தலைவர் கோர்ட்டிற்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பார்.

வழ: தலைவருக்காக நீர் கடமையாற்றலாம்?- இந்த கவுன்சிலில் எந்தவிதமான அதிகாரமும் எனக்கில்லை.

வழ: அப்படி மணிஓடர் வந்திருந்தால் என்ன செய்வீர்?- தலைவரிடம் நேரில் கேட்பேன்.

வழ: சபைக்கு பணம் கொடுக்கவேண்டியிருப்பவர்கள் மீண்டும் ரெண்டர் எடுக்கலாமா?- பார்த்துத்தான் சொல்லவேண்டும்.

வழ: ஞாபகத்தில்சொல்ல முடியாது?- ஆம்

அநேகமான விஷயங்களுக்கு பைலைத்தான் பார்க்க வேண்டும்?- ஆம்.

நீதி: நீர் தலைவருக்கு அனுப்பிய மூலப்பிரதி திரும்பி கந்தோருக்கு வந்ததா?- என்னிடம் வந்தது பற்றி நல்லாய் சொல்ல முடியாது.

நீதி: கந்தோருக்கு வந்ததா?- வேறுயாருக்கும் அனுப்பப்பட்டதா அல்லது தலைவர் வைத்திருந்தாரோ தெரியாது.

எதிர் மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எச். [illegible]தம்பையா சாட்சியமளி[illegible] வெற்றிவேலுவை மறு விசாரணை செய்தார்.

வழ: மன்னாருக்கு வருவதற்கு முன் எங்கே கடமையாற்றினீர்?- திருகோணமலையில்.

வழ: என்னபதவியிலிருந்தீர்?- உதவிச் செயலாளர்.

வழ: மாற்றத்தில் மன்னாருக்குவந்தீர்?- ஆம்

வழ: உத்தியோக உயர்வு பெற்றுவந்தீர்?- ஆம்

வழ: கூட்டம் ஒவ்வொன்றிலும்சமுகமளித்திருந்தீர்? ஆம்.

வழ: 28-8-70-ல் நடந்த கூட்டத்தில் 11-ம் தீர்மானத்தை, அறிக்கையிலிருந்து வாசியும்?- 7-ம் வட்டார உறுப்பினர் ச. அல்பேட் பின்வரும் பிரேரணையை பிரேரிக்க அ. சி. பிரான்சிஸ் அனுவதித்து ஏகமனதாக நிறைவேறியது காலஞ்சென்ற சுந்தைய காவலாளிக்கு கொடுக்கப்படாமலிருந்த சில சம்பளத்தை வழங்க நற்பணிபுரிந்த அ. வே வெற்றிவேலுவிற்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கவேண்டும்.

நீதி: அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?- ஆம்

நீதி: பிரித்தா அல்லது ஏகமனதாகவா?- ஏகமனதாக.

வழ: மற்றக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதா?- ஆம். தலைவர் சமுகமளிக்கவில்லை.

நீதி: முதல் கூட்டத்தில் தலைவர் இருந்தாரா?- ஆம்.

வழ: எதற்காக இந்த மதிப்புரை?- காலஞ்சென்ற சந்தைகாவலாளிக்கு சம்பளப்பாக்கி கொடுக்கப்படாமலிருந்தது முன்பு இருந்தவர்கள் கொடுக்காமலிருந்ததால், நானாகவே அதைப் பார்த்துசரிப்படுத்திக்கொடுத்தேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.)

### நடமாடும் கச்சேரிமுறை

மூதூர், செவ்வாய்

மூதூர் தொகுதியில் ''நடமாடும் கச்சேரி முறையை'' தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சரும் மூதூர் முதல் எம். பி. யுமான ஜனாப். ஏ. எல். ஏ. மஜீத் ஆரம்பித்து வைத்துள்ளார்,

காரியாதிகாரி, விவசாய அதிகாரி அரசாங்கஅதிகா[ரி], கல்வி அதிகாரி, உள்ளூராட்சிஅதிகாரி, கூட்டுறவுப் பகுதி அதிகாரி, பொலிஸ் அதிகாரி ஆகிய பல்வேறு இலாகா முக்கியஸ்தர்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள்,

இவர்கள் ஒவ்வொரு குடியேற்றப்பகுதி, கிராம சபைப்பகுதிகளுக்கும்மாதம் ஒரு தடவை நேரடியாகச் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகளால் பொதுமக்களின்கஷ்டங்களை அதிகாரிகள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுவதுடன் அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

......

### புரட்சிவாதிகள் பற்றிய படங்கள்

ஒட்டாவா, நவ. 10

கனடாவில் பிரிட்டிஷ் இராஜதந்திரியான ஜேம்ஸ் குரோசைக் கடத்தியவர்கள் பற்றிய மேலும் மூன்று படங்கள் மொன்றியேலில் வெளியிடப்பட்டன. இப் படங்களை கனடியப் பத்திரிகைகள் பிரசுரித்தன, இது பற்றி சில தினங்களுக்கு முன் இரு புகைப்படங்கள் வெளியிடப்பட்டன.

இப்பொழுது இக்கடத்தல் பற்றி மொத்தம் ஐந்து படங்கள் வெளியாகி இருக்கின்றன, பொதுஸ்தாபனங்கள் பொதுக்கட்டிடங்கள் ஆகியவற்றை பொலிசார் சோதனையிட்டு வருகின்றனர்.

— —

கல்வி அமைச்சின்

மேலதிகாரி[illegible]

## பஸ்களில் பெண்களுக்கு தனியாக ஆசனங்கள்

மாந்தை வடக்கு கி. ச.

## 11 வட்டாரங்களில் போட்டியின்றித் தெரிவு

அடம்பன், செவ்வாய்

மாந்தை வடக்கு கிராம சபைத்தேர்தலில் மொத்தம் 15 வட்டாரங்களில் 11 வட்டாரங்களில் அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 4 வட்டாரங்களில் டிசம்பர் 4-ம் திகதி தேர்தல் நடைபெறும்.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் விபரம் வருமாறு:

2-ம் வட்டாரம்: திரு எஸ் அந்தோனிப்பிள்ளை, 3-ம் வட்டாரம்: திரு எஸ் பத்மநாதன், 4-ம் வட்டாரம்: திரு தொ ஆரோக்கியம், 5-ம் வட்டாரம்: திரு எஸ் சவரிமுத்து 6-ம் வட்டாரம் திரு எம் செபமாலை, 7-ம் வட்டாரம்: ஜனாப் எம் முகம்மது ஜுனைது, 8-ம் வட்டாரம். திரு எஸ் செபமாலை, 9-ம் வட்டாரம்- ஜனாப் முகையதீன்கனி 10ம் வட்டாரம்: திரு ஏ அந்தோனிப்பிள்ளை. 11 ம் வட்டாரம் திரு ஏ சூசைப்பிள்ளை. 15-ம் வட்டாரம் திரு கே செபஸ்தியாம்பிள்ளை.

மாந்தை தெற்கு கி, ச. தேர்தல்

## 8 வட்டாரங்களில் போட்டி இல்லை

மாந்தை, செவ்வாய்

மாந்தை தெற்கு (உயிலங்குளம்) கிராமசபைத் தேர்தலில் 8 அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், 11 வட்டாரங்களைக் கொண்ட கிராமசபையின் ஏனைய மூன்று வட்டாரங்களிலும் தேர்தல் நடைபெறவுள்ளது.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு எஸ் கிளமென்ட் 2-ம் வட்டாரம் திரு ஏ. சந்தியோகு 3-ம் வட்டாரம்: திரு ஏ. எஸ் செல்வரத்தினம், 4-ம் வட்டாரம் திரு எஸ். பேதுருப்பிள்ளை. 8-ம் வட்டாரம் திரு ஏ. பறுநாந்து, 9-ம் வட்டாரம் திரு வை. சந்தியா பெரேரா' 10-ம் வட்டாரம்: திரு பி. ஏ. சந்தியோகு 11-ம் வட்டாரம், திரு எஸ். எதிர்மன்னசிங்கம்

ஏனைய மூன்று வட்டாரங்களிலும் தேர்தல் போட்டி டிசம்பர் 2ம் திகதி நடைபெறும்.

யாழ். மாவட்ட

## கி. சேவையாளர்கள் இடமாற்ற விபரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமசேவையாளர்கள் பலர் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். ஒரே இடத்தில் 4 வருடகள்வரை சேவை செய்தவர்களுக்கு மட்டுமே இடமாற்றல் கிடைத்துள்ளது. வருகிற ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கிராம சேவையாளர்கள் அவ் அவ் இடங்களிம் கடமைகளைப் பொறுப்பேற்பர்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளர்களின் இடமாற்ற விபரம் வருமாறு:

நயினாதீவில் கடமையாற்றிய திரு ரி பாலசிங்கம் புங்குடுதீவு கிழக்கும், புங்குடுதீவு கிழக்கு திரு எஸ் சந்[illegible] லிங்கம் மண்டைதீவுக்கும் காரைநகர் கிழக்கு என். கதிர்காமநாதன் ஊர்காவற்றுறைக்கும் ஊர்காவற்றுறை என். அருளையா காரைநகர் மேற்குக்கும் சுருவில் எஸ். மகாலிங்கம் எழுவைதீவுக்கும் மண்டைதீவு வி. சிவப்பிரகாசம் நயினாதீவுக்கும் தாரந்தனை ஏ. பி. புண்ணியமூர்த்தி அம்பனுக்கும் துன்னாலை வி, பொன்னம்பலம் காரைநகர்கிழக்குக்கும். நெடுந்தீவு கிழக்கு ஆர் வைத்திலிங்கம் கரம்பனுக்கும், கீரிமலை எஸ். சேதுபதி நெடுந்தீவு மத்திக்கும், நெடுந்தீவு மேற்கு என் கந்தையா நெடுந்தீவு கிழக்குக்கும், நெடுந்தீவு மத்தி பி இராமநாதன் ஊரெழுவுக்கும், அரியாலை கிழக்கு என். [illegible]

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த
செல்லப்பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

**செல்லப்பெண்**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

**மாட்டுக்கார வேலன்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி-சரோஜாதேவி சோ-மனோரமா நடித்த

**ஐந்து லட்சம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00

போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி

அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி

வி. நாகையா — ஜி. சகுந்தலா

மற்றும் பலர் நடித்த

**உயர்ந்த மனிதன்**

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.

இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


வர் அனுப்பிய துண்டுதான் இது? ஆம்.

வழ: இது தலைவர் விரும்பினுர்: அதனுல் அனுப்பினுர்? ஆம்.

வழ: சில வேளை சிலர்நேரடியாக தலைவரிடம் போகலாம்?- இருக்கலாம்.

நீதி. தெரிவு செய்யப்பட்டவர் தலைவரிடம் போகாமல் கந்தோரில் கட்டலாம்? அறிவித்தலுடன் வந்து கட்டலாம்.

வழ: சமாசுதீன் ரெண்டர் பணம் கட்ட வந்தார்? ஆம்.

வழ: தலைவர் நிராகரித்து விட்டார்? ஆம்.

வழ: பணத்தை ஏற்க வேண்டாமென்று உமக்கு உத்தரவிட்டார்? ஆம்.

வழ: வேறுஏதாவதுமுறையில் அப்பணத்தை அவர் கட்டமுடியுமா? அது அவருக்குத்தான் தெரியும். நான் எப்படி சொல்லுவேன்.

வழ: சபையில் அப்பணத்தை மணிஓடர்மூலம் திணிக்கமுடியுமா? தெரியாது.

வழ: சபைக்கு கொடுக்க வேண்டிய பணத்தை சிலர் கொடுக்காமல் இருக்கிருர்கள்? ஆம்.

வழ: சிலர் மீதுவழக்கு தாக்கல்செய்யப்பட்டது? இருக்கலாம்.

வழ: வழக்கு இருக்கும் போது பணத்த ஏற்றுக்


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா, பிரீபோயா 2-30

ரவிச்சந்திரன் — காஞ்சனு நடித்த

**அதே கண்கள்**

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

ஜெய்சங்கர் - வசந்தா நடித்த

**இரவும் பகலும்**

REGAL

Jaffna

Daily 4-45, 7 &9-45

Elvis Presley

And

Mary Tyler Moore

in

CHANGE OF HABIT

MANOHARA

Jaffna

Daily4-45, 7 &9-45 p m

Poya days 10-30 a. m.

Cornel Wilde

in

BEACH RED

(Color by Delux)


வெற்றிவேலுவை மறு

நடைபெறுகிறது.)

# பஸ்களில் பெண்களுக்கு தனியாக ஆசனங்கள்

## இ. போ. ச. தலைவர் உறுதி

மட்டுவில், செவ்

யாழ்ப்பாணப் பகுதியில் சேவையில் ஈடுபடும் சகல இ. போ. ச. பஸ்களிலும் பெண்களுக்கென தனி ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும் என்று உடுப்பிட்டி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. க ஜெயக்கொடி விடுத்த கோரிக்கையை நிறைவேற்றித்தருவதாக இ. போ. ச. தலைவர் திரு. அனில் முனசிங்கா உறுதியளித்து திரு ஜெயக்கொடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இ. போ. ச. தலைவர் உடுப்பிட்டி எம். பி.க்கு எழுதிய கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது:

'தங்கள் கோரிக்கையை முக்கியமாகக் கவனித்து, அதை நிறைவேற்றி வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். தங்கள் கோரிக்கையின்படி இனிமேல் வடபகுதிகளில் ஓடும் சகல பஸ்களிலும் பெண்களுக்கென தனி இடம் ஒதுக்கப்படுவதுடன் அதில்பெண்களுக்கு மட்டும் என்று தமிழ், சிங்களம், ஆங்கிலம், ஆகிய மும்மொழிகளிலும் பொறிக்கப்படும்.

இ போ சவிற்குச் சொந்தமான ஒரு நுழைவாசல் உள்ள சிறிய பஸ்களில் முன்புறத்திலுள்ள இடதுபக்கத்தில் முதல் ஆசனம் ஒதுக்கப்படும் என்றும் இரட்டைத் தட்டு பஸ்களில் அவ்வண்ணமே ஒரு பெரிய ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் பெண்களை மட்டும் அனுமதிப்பதன் மூலமும் பெண்களுக்குரிய ஆசனங்களிலிருந்து பிரயாணம் செய்யும் ஆண்கள், பெண்கள் பஸ்களில் ஏறும்போது அவ்விடத்தை விட்டுக் கொடுப்பதன்மூலமும் தாய்க்குலம் கஷ்டமின்றி பிரயாணம் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்று உடுப்பிட்டி எம். பி கருதுகிருர். இம்முறையைக் கண்டிப்பாக இ போ ச அமுல் நடத்த வேண்டும் என்றும் அவர் கோரவுள்ளார்.

அடுத்தாண்டு முதல் இம்முறை நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவு நீதிபதி

# வைத்தியப்பத்திரம் வழங்கிய டாக்டருக்கு எச்சரிக்கை!

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்பிய கிராமசபைத் தலைவரும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கிய டாக்டரும் நீதிபதியினுல் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

முள்ளியவளைக் கிராமசபைத் தலைவர் திரு மு அரியகுட்டி முள்ளியவளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரைக் கடையில் வைத்து தாக்கி உடமைகளுக்கு நஷ்டம் விளைவித்தாரென முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மீண்டும்முல்லைத்தீவு மேலதிக நீதிபதி ஜனுப் ஏ. எம், ஐ. சகீம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சென்ற தவணை நீதிமன்றத்துக்கு வராது வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்பிய எதிரியும் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்கிய பருத்தித்துறையைச் சேர்ந்த டாக்டர் பராசசேகரமும் கடந்த தவணையின்போது அனுப்பப்பட்ட சமன்சை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தில் எதிரி நீதிமன்றத்துக்கு சமூகம் கொடுக்க முடியாதென டாக்டர் குறிப்பிடவில்லையென்றும் இப்படியான வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை இனிமேல் வழங்குவதில் மிகமிகக் கவனமாயிருக்க வேண்டுமென்றும் நீதிபதிகூறி டாக்டரை எச்சரிக்கை செய்வதாகத் தெரிவித்தார். இப்படியான வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்ப வேண்டாமென எதிரியையும் எச்சரிக்கை செய்து விசாரணையை அடுத்தமாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கள் ஆகியவற்றை பொலிசார் சோதனையிட்டு வருகின்றனர்.

கல்வி அமைச்சின்

# மேலதிகநிரந்தரக் காரியதரிசி

கொழும்பு. செவ்வாய்

வித்தியோதய பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே. எச். எம். சுமதிபாலா கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிறந்த பேச்சாளரும் சோஷலிசவாதியுமாவார். கடந்த தேர்தல் காலங்களில் ஐக்கிய முன்னணித் தேர்தல் மேடைகளில் இவர் பிரசாரம் செய்துவந்தார். (சிபிஏ)

......

# ஏழைகள் உதவிப்பணம் இல்லை

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து மாதாந்த உதவிப்பணம் பெறும்பல ஏழைப் பெண்கள் தங்கள்உதவிப் பணத்தைப் பெறமுடியாமல் நேற்றுத் திரும்பினர். பழைய ஐம்பது நூறுரூபாநோட்டுக்களை இவர்கள் வங்கியில் மாற்றியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்படவில்லை.

வேறுசிலர் தங்களிடம் நோட்டுக்களை தந்து மாற்றியதாக இவர்கள் கூறியுள்ளனராம்.

இடமாற்ற விபரம் வருமாறு!

நயினுதீவில் கடமையாற்றிய திரு ரி பாலசிங்கம் புங்குடுதீவு கிழக்கும், புங்குடுதீவு கிழக்கு திரு எஸ் சந்திரசேகரம்நாரந்தனைக்கும், கரம்பன் திரு ஆர் சுந்தரலிங்கம் சுருவிலுக்கும், காரைநகர் மேற்கு திரு எஸ் கனக

சேதுபதி நெடுந்தீவு மத்திக்கும், நெடுந்தீவு மேற்கு என் கந்தையா நெடுந்தீவு கிழக்குக்கும், நெடுந்தீவு மத்தி பி இராமநாதன் ஊரெழுவுக்கும், அரியாலை கிழக்கு என். கணபதிப்பிள்ளை நெடுந்தீவு மேற்குக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

# யாழ். செயலகத்தில் மதியுரைக்குழு

யாழப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் 'மதியுரைக்குழு' ஒன்று அமைக்கப்படவிருக்கிறது தேர்தல்மூலம் இதன் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

செயலகத்தில் இயங்கும் பல்வேறு இலாகாக்களிலுமிருந்து தெரியப்படும் 14 உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பர். இத்தேர்தலில் எல்லா இலாகாக்களிலுமிருந்தும் 24 பேர் பங்குபற்றுவர். இதற்கான தேர்தல் இன்று காலை செயலக உரையாற்று மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (குவிம)

# 'இறந்தவர் அந்த அறையில் தங்குவதுவழமை'

மட்டுவில், செவ்வாய்

"சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகாமையிலுள்ள கடைக்கட்டிடத்தை இறந்தவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார் இரவுநேரம் அங்கு ஒரு அறையிற்றன் இறந்தவர் தங்குவதும் வழக்கம் சம்பவதினம் இரவு நான் எனது கடை விருந்தையில் படுத்திருந்தேன் நான் உறக்கத்திலிருக்கும்போது இரண்டு துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்டது நான் எழுந்து பார்த்தபோதுயாரோமூவர் மேற்குப்பக்கமாக ஓடுவது போல் தெரிந்தது நான் லைட் அடித்துப் பார்த்து விட்டுப் படுத்துவிட்டேன்"

இவ்வாறு கொடிகாமம் பஸ் சாரதி ஐயா கொலை வழக்கில் சாட்சியமளித்த ஆறுமுகம் கனகு என்பவர் சர்வகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே, விக்னராஜா முன்னிலையிற் கூறினுர்.

மேல்விசாரணை 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சிவதீட்சை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இம் மாதம் 13-ம் திகதி ஸ்ரீமத் தி திரு ஞானசம்பந்தக் குருக்கள் மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் சிவதீட்சை செய்துவைப்பர்.

# இலங்கையில் முதலாவது அபிவிருத்திக்குழு மல்லாகத்தில்!

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையின் முதலாவது கிராம அபிவிருத்திக் குழு மல்லாகத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவிருக்கிறது. இந்தத் தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தெரிவித்தார்.

அபிவிருத்திக்கான ஐந்து மாவட்டங்களில் ஒன்றுக வடபகுதியும் தெரிவுசெய்யப்பட்டு, கிராமங்கள் தோறும் அபிவிருத்திக் குழுக்கள் நியமிக்க அரசாங்கம் முடிவுசெய்தது. இதற்கான நடவடிக்கைகளை வடபகுதி அரசாங்க அதிபர் மேற்கொண்டார்.

அடுத்த மாதம் 4ம் திகதி மல்லாகத்தில் இலங்கையிலேயே முதலாவது அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதென்றும், அப்பகுதிக் காரியாதிகாரி அக்குழுவின் தலைவராக இருப்பாரென்றும், கிராமசபைத் தலைவர், மற்றும் பொது ஸ்தாபனங்களின் தலைவர்கள் குழுவில் அங்கம் வகிப்பார்களென்றும் அரசாங்க அதிபர் கூறினுர்.

கிராமங்களை முன்னேற்றமான பாதையில் இட்டுச் செல்லவும், கைத்தொழில் நிறுவனங்களை நிறுவி இப்பகுதி இளைஞர்களுக்கு வேலை கொடுக்கவும், மற்றும் பல முற்போக்கான காரியங்களையும் இக்குழு செய்யுமெனவும் அரசாங்க அதிபர் கூறினுர். (குவிம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியாவுடன் மீண்டும் பிரிட்டன் பேச்சு நடத்தும்

# பெரும்பான்மை கறுப்பருக்கு விமோசனம் கிடைக்குமா?

லண்டன், நவ: 10

**ரொடீஷிய சட்டவிரோத ஆட்சியாளருடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு பிரிட்டன் முயற்சி எடுக்கவிருக்கின்றது.**

இது சம்பந்தமாக ஆரம்ப முயற்சிகள் விரைவில் எடுக்கப்படவிருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத் டெலிவிஷன் பேகட்டியொன்றில் தெரிவித்தார்.

கறுப்பர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ரொடீஷியாவில் சிறுபான்மையினரான வெள்ளையர்கள் திரு. ஐயன் ஸ்மித் என்பவரின் தலைமையில் ஆட்சி நடத்தி வருவது தெரிந்ததே.

பெரும்பான்மை மக்களின் ஆட்சிக்கு வழிவகுத்தாலன்றி ரொடீஷியாவுக்கு சுதந்திரம் வழங்க முடியாது என்று முன்னர் பிரிட்டன் அறிவித்திருந்தது. இதனைப் புறக்கணித்துவிட்டு ரொடீஷிய வெள்ளையர்கள் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டனர். இதனால் ரொடீஷியா மீது பிரிட்டன் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

பிரிட்டன் பலதடவைகள் ரொடீஷிய ஆட்சியாளருடன் சமரசப் பேச்சுக்கள் நடத்தி அங்கு முறையான ஆட்சியை ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஆனல் திரு. ஸ்மித் இவைகளைப் புறக்கணித்துவிட்டு ரொடீஷியாவை குடியரசாகப் பிரகடனப் படுத்திக் கொண்டார்.

பிரிட்டனில் கன்சர்வேடிக் கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் இப்பொழுது மீண்டும் ரொடீஷியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனல் நன்மை ஏதும் விளையுமா என்பது தெரியவில்லை.

## ஜார்ஜிய மொழியில் தாகூரின் நூல்கள்

மாஸ்கோ, நவ 10

ஜார்ஜிய கவிதைப் பதிப்பகம் மாபெரும் இந்திய கவிஞரும் எழுத்தாளரும சிந்தனையாளருமான ரவீந்திரநாத் தாகூரின் கவிதைத் திரட்டு ஒன்றை ஜார்ஜிய மொழியில் வெளியிட்டுள்ளது.

'வங்காளம்' என்பது இத்திரட்டின் பெயர்.

தாமஸ் செங்கேலி என்ற தலைசிறந்த ஜார்ஜியக் கவிஞர் தாகூரின் சிறந்த படைப்புக்களை மொழிபெயர்த்துள்ளார். இவர் தாகூரின் படைப்புக்களில் 15 ஆண்டுகள் ஊறித்திளைத்தவர்; இவர் தாகூரின் கவிதைகளை ஜார்ஜிய மொழியில் ஆக்கியிருப்பதுடன், 'தாகூரின் வாழ்வும் படைப்புக்களும்' என்ற நூலையும் எழுதியுள்ளார்.

## அஸ்வான் அணை

செய்ரோ, அக். 19

அஸ்வான் உயர் அணை திறப்புவிழா காலஞ்சென்ற ஜனதிபதி நாஸரின் பிறந்த தினத்தில், அடுத்த ஆண்டு கொண்டாடப்படும்.

அஸ்வான் திட்டம் சோவியத் யூனியன் உதவியுடன் நிர்மானிக்கப்பட்டது.

## பக்தவத்சலம் பாராட்டு

சென்னை, நவ. 10

தமிழ்நாடு அரசு காவிரி நீர்பங்கீடு விவகாரத்தில் கடைப்பிடிக்கும் கொள்கையை முன்னள் முதலமைச்சர் பக்தவத்சலம் பாராட்டினர்.

தாம்பரத்தில் நடந்த விழாவொன்றில் தமிழ்நாடு முதலமைச்சர் கருணநிதியின் படத்தைத் திறந்துவைத்துப் பேச்சையில் அவர் பாராட்டுத்தெரிவித்தார்.

''காவிரி நீர்ப்பங்கீடு விவகாரத்தில் தமிழ் நாடு அரசு உறுதியான கொள்கையைக் கடைப்பிடித்து வருவதை நான் பாராட்டுகிறேன்'' என திரு. பக்தவத்சலம் கூறினர்.

## தொடர்ந்து பொருளாதார நிர்ப்பந்தம்

ரொடீஷியா மீது மேலும் ஓர் ஆண்டுகாலம் பொருளாதார நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவது என்ற தீர்மானம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நேற்று நிறைவேறியது. இத்தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறிய போதிலும் 20 கன்சர்வேடிவ் அங்கத்தவர்கள் எதிர்த்து

'ரொடீஷியாவுக்குச் சுதந்திரம் அளிக்கக்கூடாது; அங்கு பெரும்பான்மை மக்கள் ஆட்சி நடைபெற வழிவகுக்கவேண்டும்' எனக் கோரும் தீர்மானம் ஒன்றை ஆறு ஆசிய-ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்ததைக் குறிப்பிட்டார். இந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனுடன் தொடர்புடையவை

## இவர்களுக்குச் சலுகை இடைக்கிறது

கோட் ... செவ்வாய்

# கம்யூ.-தி. மு.க. தேர்தல் உடன்பாடு

சென்னை, நவ. 10

தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களில், குறிப்பாக சென்னை முனிசிப்பல் தேர்தலில் பாரத கம்யூனிஸ்ட்கட்சியுடன் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தல் உடன்பாடுகளைச் செய்துகொள்ள இணங்கியிருக்கின்றது.

முனிசிப்பல் தேர்தலில் உடன்பாடு செய்துகொள்வது சம்பந்தமாகப் பாரத கம்யூனிஸ்ட்கட்சி நடத்தவிருக்கும் மாநாடொன்றில் கலந்துகொள்வதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது. பாரத கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தி. மு. க. தனது பிரதிநிதிகள் சிலரை அனுப்புமென்று தெரிகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்வதுபோலவே இந்திரா சார்புக் காங்கிரஸ் கட்சியுடனும் தேர்தல் உடன்பாடுகளைச் செய்து கொள்ளத் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புவதாகத் தெரிகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரஜாசோஷலிஸ்ட் கட்சி, வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடனும் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளும் சாத்தியமிருப்பதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். பி. சுவாமிநாதன் தெரிவித்திருக்கிறர்.

மத்திய அரசின் முற்போக்குக் கொள்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்துவருவதால் அக்கட்சியுடன் தமிழ்நாட்டில் மோதிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்று திரு. சுவாமிநாதன் கருத்து வெளியிட்டிருக்கிறர்.

### சுதந்திரா-ஜனசங் உடன்பாடு

தமிழ்நாட்டில் விரைவில் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களின்போது சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியுடனும், ஜனசங்குடனும் தேர்தல் உடன்பாடுகளைச் செய்துகொள்வதற்கு மாநில சுதந்திரக்கட்சி முடிவுசெய்திருக்கின்றது.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த பஞ்சாயத்து தேர்தல்களின்போது சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியே அதிகமான இடங்களைப் பிடித்ததாக திரு. காமராசரும், திராவிட முன்னேற்றக் கழகமே அதிக இடங்களைப் பிடித்ததாக முதல்வர் திரு. கருணநிதியும் கருத்துகள் வெளியிட்டு வந்தது தெரிந்ததே. இப்பொழுது நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களின்போது தி மு. க. வுக்கும், பழைய காங்கிரஸ் கட்சிக்குமிடையில் பலத்த போட்டியிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கீழைத்தேய கலைகள்: லண்டனில் கண்காட்சி

லண்டன், நவ. 10

தென் கிழக்காசிய நாடுகளின் கலை, கலாச்சாரங்களை சித்தரிக்கும் கண்காட்சி ஒன்று அண்மையில் லண்டனில் இடம் பெற்றது. கிழக்கிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே சுமார் மூன்றரை நூற்றாண்டுகாலமாக நடைபெற்ற கடல் வர்த்தகத்தின் பயனுக கலைத்துறையில் ஏற்பட்ட தாக்கத்தை இக் கண்காட்சி [illegible]

'கலை [illegible] வர்த்தகமும்' என்ற பொருளில் [illegible]

வாழ்க்கை முறையையும் கலைஞானத்தையும் மட்டுமன்றி இந்நாடுகளில் வசித்த வர்த்தகர்கள், போர் வீரர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் அனுபவங்களையும் இக் கண்காட்சி எடுத்தியம்புகிறது.

கீழைத் தேசங்களுக்கு ஐரோப்பியர்மேற்கொண்ட ஆரம்ப யாத்திரைகளின் சரித்திரச் சின்னங்கள் பல [illegible] சியில் வைக்கப்பட் [illegible] 1498ம் ஆண்டு வஸ்கொடகாமா இந்தியாவுக்



# அபிவிருத்தித்திட்டங்களின் நோக்கம் நிறைவேறிவிட்டதாம்

## பிரெஸ்னேவின் பெருமகிழ்ச்சி

மாஸ்கோ, நவ 10

சோவித் கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது காங்கிரசால் வகுக்கப்பட்ட தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான இலக்குகள் நிறைவேற்றப் பட்டுள்ளன என்று சோ. க. க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஸ்னேவ் கூறினர்.

1917-ம் ஆண்டு நடைபெற்ற அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 53-வது ஆண்டுத் தினத்தை ஒட்டி கிரெம்ளின் மாளிகையில் விருந்து நடைபெற்றது. அங்கு பிரஸ்னேவ் பேசினர்.

''அக்டோபர் புரட்சியின் இந்த வருட ஆண்டு விழா நடைமுறை ஐந்தாண்டுத் திட்டத்தின் பூர்த்தியுடன் இடம்பெறுகிறது வீரமிக்க தொழிலாளி வர்க்கத்தினதும், மகத்தான விவசாய வர்க்கத்தினதும், மக்கள் அறிவாளிகளினதும் உழைப்பு மகத்தான சாதனைகளை ஈட்டியுள்ளது. 23-வது கட்சிக் காங்கிரசின் தேசியப் பொருளாதாரத் திட்ட இலக்குகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. சோவியத் ராஜ்யத்தின்பன்முக வளர்ச்சியில் இது ஒரு புதிய அபிவிருத்திக்கட்டத்தைக் குறிக்கிறது. சோவியத்யூனியனின் வலிமையின் பெருக்கத்திலும், அதன் தற்காப்புச் சக்தியின் வலுவிலும் அது கம்யூனிஸ நிர்மாணத்தின் மகோன்னதமான வளர்சிக்கட்டத்தைக் குறிக்கிறது'' என்றுர்பிரஸ்னேவ்

செஞ்சதுக்கத்தில் நாங்கள் ஆயுதப் படைகளின் அணிவகுப்பை பார்வையிட்டோம் மாஸ்கோ உழைக்கும் மக்களின் மகத்தான பவனியையும் கண்டோம். மாஸ்கோ மக்கள் கங்குகரையற்ற உற்சாகத்துடன் அணிவகுத்துச்சென்றுர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமது மகத்தான சாதனைகளை அவர்கள் துலாம்பரப்படுத்தினர்கள் என்றுர் அவர்.

## பிரமாண்டமான ராணுவ அணிவகுப்பு

மாஸ்கோ, நவ. 10

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 53-வது ஆண்டுத்தினத்தை ஒட்டி மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற சம்பிரதாயமான ராணுவ அணிவகுப்பு போர் முக்கியத்துவம்வாய்ந்த ரொக்கட் படைகளின் பவனியோடு முடிவுற்றது.

லெனின் கல்லறையின் மேடையில் லியோனிட் பிரெஷ்னேவ், நிக்கலாய் பொட்கர்னி, அலக்ஸி கொஸிஜின், மற்றும் சோவியத்தலைவர்கள் நின்றனர். அணிவகுப்பை எண்ணிறந்த சோவியத். அயல்நாட்டு பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

எட்டு ராணுவ கல்லூரிகளினதும் வீரர்களின் அணிவகுப்பைத்தொடர்ந்து பல்வேறு படைப்பகுதிகளைச் சேர்ந்த வீரர்கள் அணிவகுத்துச்சென்றனர்.

2-வது உலகயுத்தத்தின் போது பெரும்கீர்த்திபெற்ற டாமன், கண்டமிரொவ்ஸ்கயா படைப்பிரிவுகள் டாங்கிகளிலும், படைவீரர்களைக் காவிச்செல்லும் ராணுவ வண்டிகளிலும் சென்றன.

கடந்த கால் நூற்றுண்டினுள் சோவியத் ஆயுதப் படைகள் பல புதிய ஆயுதங்களால் ஆயுதபாணியாக்கப் பட்டுள்ளன. ஆகாயமார்க்கமாகச் செல்லும் படைப் பகுதியின் முதுகெலும்பாக உள்ள தன்னியக்க பீரங்கிப் படை யூனிட்டுகள் முக்கியமானவை. இவை பவனியில் கொண்டுவரப்பட்டன

ரொக்கட் யூனிட்டுகள் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தின. மிக உயர் மட்டத்திலும் தாழ்வு மட்டத்திலும் உள்ள மிக மிகத் தூரத்திலான இலக்குகளையும் குறி தவருது தாக்க வல்ல நில-ஆகாய ஏவுகணை மக்களின் கவனத்தை ஈர்த்தன. இவைஎந்த சீதோஷ்ண நிலையிலும் செயல்படக் கூடியனவாகும். தரைப் படையின் பிரதான ஆயுதமான தந்திரோபாய-செயல் தந்திரோபாய ஏவுகணைகளும், கடற்படையின் ஏவுகணைகளும் பவனியில் வந்தன.

அணிவகுப்பின் போது பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் மந்திரி- கிரெச்கோ கூறியதைப்போல் 'சோவியத்யூனியனிடம் பிரமாண்டமான வலுமிக்க ஆயுதப் படைகளும், முதல்தர ஆயுதங்களும் உள்ளன'.

ராணுவ அணிவகுப்பைத் தொடர்ந்து மாஸ்கோ உழைக்கும் மக்களின் பவனி இடம்பெற்றது இது சுமார் 3 மணித்தியாலங்கள் நடைபெற்றது.

## பாடசாலைகளில் கணக்கெடுப்பு

பருத்தித்துறை, செவ்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பல பாடசாலைகளிலுள்ள நூலகப் புத்தகங்கள் தளபாடங்கள் விவசாயக் கருவிகள் ஆகியன அரசாங்க உத்தியோகத்தரால் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரக் கல்லூரியில் கடந்த ஒருமாத காலமாகக் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

## ரஷ்ய அயல் நாட்டு கொள்கை பற்றி விளக்கம்

மாஸ்கோ, அக். 10

'ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை செயலூக்கமாக எதிர்த்து மக்களின் பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்துவது சோவியத் அயல்நாட்டுக் கொள்கையின் அசைக்க முடியாத ... ஆக்கிரமிப்பை எதிர்த்து வியட்னும், லாவோஸ், கம்போடியா, மத்தியகிழக்கு மக்களுக்குஆதரவாக சோவியத் யூனியன் நிற்கிறது. இரண்டாம் உலகமகா யுத்தத்துக்குப் பின்னர் நீண்ட ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நேற்று நிறைவேறியது. இத்தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறிய போதிலும் 20 கன்சர்வேடிவ் அங்கத்தவர்கள் எதிர்த்து வாக்களித்தார்கள்.

பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் ரொடீஷியா பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டக்ளஸ் ஹியூம், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வருக்கவேண்டும்" என் கோடும் தீர்மானம் ஒன்றை ஆறு ஆசிய-ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்ததைக் குறிப்பிட்டார். இந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனுடன் தொடர்புடையவை அப்படியிருந்தும் அந்நாடுகள், பிரிட்டனுடன் இது பற்றி ஆலோசனை கலக்காமல் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பது பிரிட்டனுக்கு மிகவும் கவலையைக் கொடுப்பதாகும் என்றார் அவர்.

## ''ஆசிரியர்களின் சேவையை அரசு பாராட்டவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர்கள் நன்கு மதிக்கப்படல் வேண்டும் அவர்களே நாட்டின் சமுதாயச் சிற்பிகள்' என வேலணை மத்திய கல்லூரியில் நடந்த தீவுப்பகுதித் தமிழாசிரிய சங்க நிருவாகசபைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய சங்கத்தலைவர் பண்டிதர் வீ. வ. நல்லதம்பி கூறினார்.

ஆசிரியப்பணி புனிதமானது. நாட்டின் நற்பிரசைகளை உருவாக்கும் பெரும் பணி அவர்களிடம்தான் தங்கியுள்ளது. அப்பணியைச் சிறப்புடன் ஆற்றி இளைப்பாறும் ஆசிரியர்களையும் என்றும் மறக்கமுடியாது ஆகவே அவர்களுக்கு எமது சங்கம் சிறப்புச் செய்தல் வேண்டும். தீவுப்பகுதியில் சங்க உறுப்பினராக இருந்து இவ்வாண்டில் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு பெரிய வரவேற்பு அளிக்கவேண்டும் நமது சங்கம் மாத்திரமல்ல ஏனைய ஆசிரிய தொழிற் சங்கங்களும மாணவ சமுதாயமும் அரசாங்கமுமே அவர்களின் சேவையைப் பாராட்டவேண்டும்'' என திரு நல்லதம்பி மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீவுப்பகுதித் தமிழாசிரிய சங்க 3-ம் 4-ந் தரப்பரிசையை இம்மாதம் 27-ம் திகதி நடாத்துதல் வேண்டும் என்றும் 55 வயதில் இளைப்பாறவேண்டும் என்று கல்வி இலாகா அறிவித்தல் பெற்றவர்களின் பட்டியல் தயாரித்து அவர்கள் 60வயதுவரை சேவைசெய்ய அனுமதி வழங்கக்கூடியதான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென்றும், சங்க அங்கத்தவராக இருந்து ஆண்டுதோறும் இளைப்பாறும் ஆசிரியர்களுக்குப் பொது வரவேற்பு அளித்தல் வேண்டும் என்றும், தீவுப்பகுதியின் கல்வித் தேவைகள் ஆசிரிய நியமனங்கள் இடம் றறம் சம்பந்தமாகக் கல்வி மந்திரியுடனும் மாகாணக் கல்வி அதிபதியுடனும் பேட்டிகண்டு பேசும் ஒழுங்குகளைச் செய்தல் வேண்டுமென்றும் கூறும் தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன.

## இவர்களுக்குச் சலுகை கிடைக்கிறது

கோட்டை, செவ்வாய்

கடினமான பகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் உதவி ஆசிரியர்களுக்கு 40 ரூபாவும், தலைமையாசிரியர்களுக்கு 50 ரூபாவும் சகாயப் பணமாக (சம்பளத்திற்கு அதிகமாக) வழங்க கல்வியமைச்சு முடிவுசெய்துள்ளது.

அத்துடன் நான்கு வருடத் திறமையான சேவையைப் பாராட்டி மகாவித்தியாதிபதியினல் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். இவர்களின் பிள்ளைகள் விடுதி வசதியுள்ள மகாவித்தியாலயங்களில் கல்வி பயில்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## எங்கே வாங்குவது?

யாழ்ப்பாணம், புதன்

யாழ். அரசாங்க செயலகத்தில் பல அழகிய பொருட்களை சிறுகைத்தொழில் இலாகா காட்சிக்கு வைத்துள்ளபோதிலும் அந்தப் பொருட்களை மக்கள் எங்கு எவ்வாறு பெற்றுக்கொள்வதென்ற விபரம் தெரியாது தடுமாறுகின்றனர். பிள்ளையார் சிலை தொடக்கம் குருத்தோலையால் முடையப் பட்ட கொட்டைப் பெட்டி வரை காட்சி நிலையத்தில் வைக்கப்பட்டு அவற்றின் விலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளதாபினும் இவற்றை மக்கள் எங்கு வாங்குவதெனத் தெரியாதுள்ளது.

(குவிம)

பெற்ற கடல் வர்த்தகத்தின் பயனாக கலைத்துறையில் ஏற்பட்ட தாக்கத்தை இக் கண்காட்சி விபரிக்கிறது.

'கலையும் கிழக்கு இந்திய வர்த்தகமும்' என்ற பொருளில் இடம் பெற்ற இக் கண்காட்சியில் லண்டனிலுள்ள நூதனசாலைகளில் சேமித்து வைக்கப்பட்ட கலைச் சின்னங்களுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கடனாகப்பெறப்பட்ட கலைப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கிந்திய மக்களின் ஐரோப்பியர் மேற்கொண்ட ஆரம்ப யாத்திரைகளின் சரித்திரச் சின்னங்கள் பல இக் காட்சியில் வைக்கப்பட்டன. 1498ம் ஆண்டு வஸ்கொடகாமா இந்தியாவுக்கு எடுத்துச் சென்ற வாள், மொகலாய அரண்மனையில் இங்கிலாந்து மன்னரின் தூதராக இருந்த சேர். தோமஸ் ரோயின் உருவப் படம், திப்பு சுல்தானின் இயந்திரப் பொம்மை போன்ற பல விநோதமான பொருட்களும் இக்காட்சியில் இடம் பெற்றன.

சிட்னியில்

## பாப்பரசரை வரவேற்க பிரமாண்டமான ஏற்பாடு

சிட்னி, நவ. 10

இம்மாதம் அவுஸ்திரேலியாவில் சிட்னி நகருக்கு விஜயம்செய்யும்சின்னப் பாப்பரசர் நிகழ்த்தும் பலி பூசையில் சுமார் 5 லட்சம் மக்களுக்கு மேல் கலந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது' நவம்பர் 30ம் திகதி முதல் டிசம்பர் 30ம் திகதிவரை பாப்பரசர் சிட்னியிலிருப்பார். சிட்னி நகரின் சரித்திரத்திலேயே இவ்வளவு பெரிய அளவில் மக்கள் கூடும் நிகழ்ச்சி இதுவாகவிருக்கும்.

பாப்பரசரின் வருகை காரணமாக வந்து குவியவிருக்கும் மக்களுக்கான வசதிகளையும் போக்குவரத்து வசதிகளையும் ஏற்பாடுசெய்வதில் பொறுப்பாளர்களுக்கு பெரிய பிரச்னைகள் கிளம்பியுள்ளனவென்று தெரிகின்றது.

மக்களைக் கட்டுப்படுத்தவும் உதவிபுரியவும் 6000 தொண்டர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர். வாகனப் போக்குவரத்துக்களை நெறிப்படுத்த பொலிஸ் ராணுவ ஹெலிகொப்டர்களும் பயன்படுத்தப்படும்.

(ஏ. ஜ. எஸ்)

## 52-வது மகாநாடு

மாத்தளை, செவ்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 52-வது மகாநாடு அடுத்தமாதம் 25, 26, 27-ம் திகதிகளில் மாத்தளையில் நடைபெறவிருக்கிறது.

உத்தியோகத்தரால் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரக் கல்லூரியில் கடந்த ஒருமாத காலமாகக் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

காணப்படாத பொருட்களுக்குக் கல்லூரியில் அவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தரே பொறுப்பானவர்கள் என்னும் அவற்றுக்கான நட்டஈடு அவர்களின் மாதச்சம்பளத்தில்தவணை அடிப்படையில் கழிக்கப் படுமென்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் திறமையீனமாக அது கணிக்கப்படும் என்றும் கல்வி இலாகா அறிவித்துள்ளதாம்,

## 9126 கூப்பன்கள் ஒப்படைப்பு

கோட்டை, செவ்.

அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் செலவிடும் வெளிநாட்டுச் செலாவணியை குறைக்கும் பொருட்டு அரிசிக் கூப்பன் புத்தகங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இதுவரை 9126 கூப்பன் புத்தகங்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கூப்பன் புள்ளிகளையும் கூப்பன் புத்தகங்களையும் ஒப்படைத்தவர்களுக்குநன்றி தெரிவிக்கும் அமைச்சரின் கையெழுத்துடனன கடிதங்கள் அமைச்சினல் அனுப்பப்பட்டுவருகின்றன.

'ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை செய ஊக்கமாக எதிர்த்து மக்களின் பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்துவது சோவியத் அயல்நாட்டுக் கொள்கையின் அசைக்க முடியாத ஜீவாதாரமான அம்சம்' என்று அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 53வது விழாவில் உரையாற்றிய சோவியத் தலைவர்களில் ஒருவரான மிஹாயில் சுஸ்தோவ் கூறினார்.

கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், இந்தோ சீனவில் அமெரிக்கா நடத்தும் ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டத்தில் சோவியத் யூனியனும் மற்றும் சோஷலிஸ நாடுகளும் பிரமாண்டமான பங்கை செலுத்துகின்றன என்று சுஸ்லோவ் கூறினார்.

வியட்னும், லாவோஸ், கம்போடியா, மத்தியகிழக்கு மக்களுக்கு ஆதரவாக சோவியத் யூனியன் நிற்கிறது. இரண்டாம் உலகமகா யுத்தத்துக்குப் பின்னர் நீண்ட நெடுங்காலமாக வியட்னும் மக்களை துடைத்தெறிய நடத்தப்படும் இவ்வாக்கிரமிப்பு யுத்தம் இன்னும் ஓய்ந்தபாடில்லை என்று அவர் கூறினர்.

தமது வீர சாகசங்களால் வியட்னும் மக்கள் ஆக்கிரமிப்பாளர்களின் நீச திட்டத்தை தவிடுபொடியாக்கியுள்ளனர். போரை 'வியட்னும் மயமாக்குவது', தீர்வை 'அமெரிக்க மயமாக்குவது' பற்றி அமெரிக்கா வாயளவில் பேசி பழைய திட்டத்தை புதிய போர்வையில் முன்வைக்கிறது என்றுஅவர் குற்றஞ்சாட்டினர்.

## கம்போடிய நகர் மீது கடும் தாக்குதல்

நாம்பென். நவ 10

கம்போடிய நகர்களில் ஒன்றான நாம்பென் என்னும் இடத்தை கம்யூனிஸ்ட் படைகள் இன்று கடுமையாகத் தாக்கின. இத்தாக்குதல் காரணமாக 64 பேர் காயமடைந்தனர்.

கம்போடிய நகரங்களுள் மிகக் கூடுதலான மக்கள் தொகையைக் கொண்ட நகரமாகும் இது. அரசாங்கப் படைகளும் தென்வியட்னும் படைகளும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இளவரசர் சிகானுக்வெளிநாடு சென்றபொழுது இராணுவம் கம்போடிய ஆட்சியைக் கைப்பற்றியது. இளவரசர் சிகானுக் சீனவில் இருந்தபடியே போட்டி அரசொன்றை நிறுவிசெயல் பட்டு வருகிறர். இவருக்கு கம்யூனிஸ்ட் படைகள் உதவி செய்து வருகின்றன.

## '19 பிரதேச அபிவிருத்திச் சபை நிறுவப்படும்'

— அரசாங்க அதிபர்

மட்டக்களப்பு. செவ்வாய்

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் ஏற்பாட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 19 பிரதேச அபிவிருத்திச்சபைகள் நிறுவப் படவிருக்கின்றன,

இவ் அபிவிருத்திச் சபைகள் மாநகரசபைப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய 19 உள்ளூராட்சி மன்றங்களிலும் நிறுவப்படும்.

இச்சபைகளுக்குப் பிரிவுக் காரியாதிகாரிகள் தலைவர்களாக இயங்குவார்கள். காலவரையில் தற்போது நடைமுறையிலுள்ள மாவட்ட இணைப்புக் குழு, மாவட்ட விவசாயக்குழு ஆகியவற்றை நீக்கிவிட்டு அவற்றின் இடங்களுக்கு மாவட்ட அபிவிருத்திக்குழு ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது,

## 'நவம்' திரும்பினர்

மட்டுவில் செவ்வாய்

சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் நேற்று முன்தினம் தாயகம் திரும்பினர்.

## ஊழியர்சபை

முல்லைத்தீவு. செவ்

முல்லைத்தீவு இ.போ.ச. டிப்போ ஊழியர்சபை விபரம் வருமாறு:-

தலைவர்: திரு. செ. ஆறுமுகம்(சாரதி), செயலாளர்: திரு எம். கே. நடராசா (கொண்டக்டர்), தனாதிகாரி: திரு. எஸ். சவரிமுத்து (காரியாலய உத்தியோகத்தர்).

வழுக்கை ஆற்றுத்திட்டம் விஸ்தரிப்பு

## வடக்கில்சிறுதானியவிளைச்சலுக்கு அரசு ஊக்கம்

யாழ்ப்பாணம், புதன்

வழுக்கையாற்றுத்திட்டம் அடுத்தஆண்டு தொடக்கம் தொண்டமானறுவரை விஸ்தரிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 80க்கு மேற்பட்டகுளங்கள் அகழ்வுசெய்யப்படும். 25 நில அளவை உத்தியோகத்தர்களை நில அளவைத் திணைக்களம் இத்திட்டத்தின்கீழ் அமர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்திலுள்ள 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பல்வேறு உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வாய்ப்பளிக்குமென நம்பப்படுகிறது.

மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டங்களில் பல காரியாதிகாரிகளாலும் பலதடவைகள் வற்புறுத்தப்பட்ட இந்த வழுக்கையாற்றுத் திட்டம் கடந்த அரசாங்க காலத்தில் அமைக்கப்பட்ட போதிலும் இது சரியான முறையில் செயல்படுத்தப் படாமலிருந்தது. முப்பது குளங்கள் மட்டுமே புனரமைப்புச் செய்வதாக அப்பொழுது திட்டமிடப்பட்டிருந்தது. புதிய அரசு சுமார் 80குளங்களைத் திருத்துவதற்கு ஏற்பாடுசெய்துள்ளது.

வழுக்கையாற்றுத் திட்டத்தின் மூலம் பயறு முதலிய சிறு தானியங்கள் வடமாகாணத்தில் இனிமேல் ஏராளமாகக் கிடைக்குமெனச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(கு. வி. ம.)

சோவியத் யூனியனில்

## காவலில் வைக்கப்பட்ட யு.எஸ். ஜெனரல்கள் விடுதலை

நியுயோர்க், நவ 10

சோவியத்யூனியனில் காவலில் வைக்கப்பட்டிருந்தஇரு அமெரிக்க ஜெனரல்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என சோவியத் யூனியன் அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது,

சென்ற மாதம் இரண்டு அமெரிக்க ஜெனரல்களும் ஒரு மேஜரும் துருக்கிய கேர்ணல் ஒருவரும் சென்ற விமானம் சோவியத் பகுதியான ஆமீனியாவில் இறங்கியது. இவர்களை சோவியத் அரசாங்கம் கைது செய்து விசாரணைக்காகக் காவலில் வைத்தது.

இவர்களை விடுதலை செய்யுமாறு அமெரிக்கா கேட்ட பொழுது தீவிர விசாரணைக்குப்பின்பே இவர்களைப்பற்றிய முடிவைச் செய்யமுடியுமென சோவியத்யூனியன் முன்பு அறிவித்திருந்தது.

இதனல் சோவியத்யூனியனின் 53-வது புரட்சிவிழாவில் யு. எஸ். உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை.

கைதுசெய்து மூன்று வாரங்களின் பின்பு அமெரிக்க ஜெனரல்கள் இருவரையும் விடுதலை செய்வதாக சோவியத்யூனியன் அறிவித்துள்ளது. ஆனல் அமெரிக்க மேஜரைப்பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

இந்த அமெரிக்க ஜெனரல்கள் 24 மணி நேரத்தில் சோவியத்தைவிட்டுப் புறப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

## விவசாய ஆசிரியர் சங்கம்

பருத்தித்துறை, செவ்.

விசேட விவசாய ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி மாலை திருநெல்வேலி பழைய பிரயோக போஷனைத் திட்ட அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் ஒவ்வொருவனும் தனது எண்ணங்களை உலகளவு விசாலமாக்கிக்கொள்ளவேண்டும். கடலின் ஆழமும், எல்லையற்ற ஆகாயத்தின் விஸ்தீரணமும் உடையதாக உள்ளத்தை ஆக்கிக்கொண்டால் வாழ்வில் முன்னேற்றம் காணலாம்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

சாம்பவசரணி சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 25-ந் திகதி (11-11-70)


## வட்டி உயர்த்தக்கூடாது

அரசாங்கம் தனது ஊழியர்களுக்குக் கொடுக்கும் கடனுக்கான வட்டி விகிதத்தை இம்மாதம் முதல் உயர்த்தியிருப்பது எவ்விதத்தும் சரியல்ல. ஆரம்பத்தில் அரசாங்கம் 100க்கு மூன்று வீதம் வாங்கிவந்த வட்டியை படிப்படியாக அதிகரித்து இப்போது 10 சத விகிதத்துக்கு உயர்த்தியுள்ளது. இம் முக்கிய விஷயத்தில் அரசாங்க ஊழியர்களைக் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் அரசாங்க ஊழியர்களுக்கிடையே அதிருப்தியும், ஏமாற்றமும் ஏற்படுவதுடன் அவர்கள் சங்கடங்கள் அதிகரிப்பதாக இருக்கும்.

தங்களுக்கு சொந்த வீடு கட்டிக்கொள்ளவும், வீடுகளுக்கான நிலம் வாங்கவும், கார்கள், சைக்கிள்கள் வாங்கவும் அவசர காரணத்துக்காகவும் ஊழியர்கள் கடன் வாங்குகின்றனர். வங்கி முதலியவற்றில் கடன் வாங்குவது சுலபமல்ல, வட்டியும் அதிகம். அதனால் அரசாங்கத்திடம் மேற்குறித்த முக்கிய தேவைக்காக அதன் ஊழியர்கள் கடன் வாங்குகின்றார்கள். தங்கள் ஊழியரின் அவசரமான அவசியமான தேவைக்கு, வட்டியில்லாமலோ அல்லது அற்ப வட்டிக்கோ அரசாங்கம் கடன் கொடுப்பதே முறை. தங்கள் ஊழியர்களுக்கு கடன் கொடுப்பதன் மூலம் லாபம்பெற வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இருக்கப்படாது. வீடு கட்டுவதாயின் அதன் மூலம் கிடைக்கும் வருமானம் மூன்று சத வட்டியும் கட்டுபடியாகாது. அப்படி இருக்க பத்துசத வட்டியை அரசாங்கம் இக்கடனுக்கு வாங்குவதாயின், அது அவ்வூழியர்களைச் சுரண்டி, அவர்களை என்றென்றும் கடன்காரர்

என்ன செய்யப்போகிறது. சோஷலிஸக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் அரசாங்கம் இவ் விஷயத்தில் சும்மா இருக்க முடியாது. நிலம் இயற்கை அன்னையால் அளிக்கப்பட்டது. மக்கள் அனைவருக்கும் அது பயன்படச்செய்ய வேண்டும். எப்படி? தரிசாகக் கிடக்கும் நிலமனைத்தையும், அரசாங்கம் தன் உடமையாக்கி, உரிமையாளருக்கு நஷ்டஈடு தரலாம். குடியிருக்க வீடு கட்டிக் கொள்ள விரும்புபவர்களுக்கு, நிலத்தை விற்பதற்குப் பதில் நூறு வருட நீண்டகால ஒப்பந்தத்தில், சொற்ப வரி வசூலிக்கும் அடிப்படையில், அரசாங்கம் அளிப்பதாயின், நடுத்தர குடும்பத்தார் மட்டுமன்றி, ஏழைகளும் கூட சொந்த வீடு கட்டிக்கொள்ள முடியக் கூடும். நிலத்துக்கு அதிகப் பணம் செலுத்த வேண்டியவரை மக்களில் பலரும் சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாது. அரசாங்கம் கடன் கொடுப்பதாகக் கூறி, வட்டியை வரவரக் கூட்டிக்கொண்டு போவது, பழைய முதலாளித்துவ வழியேயன்றி சோஷலிசமாகாது.

நிலச் சீர்திருத்தம், பூமிதானம் முதலியவை பற்றி வெகுவாகப் பேசப்படும் இக்காலத்தில் நிலத்தின் விலை விஷம் போல் ஏறும்படி விடுவதை முதலில் தடுக்கவேண்டும். தங்களுக்கான வீடு கட்டிக்கொள்ள நிலத்தை நீண்டகால குத்தகை முறையில் அரசாங்கத்திடம் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்தால் அது எளிய பொதுமக்களுக்கும் அரசாங்க ஊழியருக்கும் பெரும் நன்மையாகும். அவசியமும் அவசரமுமான காரணங்களுக்காக, தங்கள் ஊழியருக்கு வட்டியில்லாக் கடன் அளிக்க அரசாங்கம் ஒழுங்குசெய்வதே முறை.

### ஆட்சி மன்றத்திலே . . .

நமது நிருபர்
பெரி சுந்தரலிங்கம்

# டட்லி - என். எம். - கொல்வின் நடத்திய சுவையான விவாதம்



வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் இறுதிக் கட்டத்தை நெருங்க நெருங்க மூன் வரிசைப் பிரச்சார பீரங்கிகள் முழங்க ஆரம்பித்துள்ளன.

ஐந்தாம் நாள் விவாதத்தில் பாரிஸ் பெரேராவும் ஆறும் நாள் விவாதத்தில் பிரேமதாசாவும், கலந்து கொண்டால், ஏழாம் நாளான இன்றைய விவாதத்தில், முன்னைநாள் பிரதமரும்ஐக்கியதேசியக்கட்சித் தலைவர், டெடிகமைத் தொகுதி உறுப்பினர் திரு. டட்லி ஷெல்டன் சேனநாயகா கலந்துகொண்டு அரசாங்கத் தரப்பினரின் வாதங்களுக்கு பதிலடி கொடுப்பதில் மும்முரமாக முனைந்தார்

''அந்தந்தக் கோயிலுக்கு அந்தந்தப்பூசாரிதான் சரி'' என்று சொல்வார்கள். ''மாற்றுரும் பொருமைப்படும் அளவுக்கு எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாகவும், உறுதியாகவும் உரைக்க வல்லவர் என்று டாக்டர்கொல்வினால் பாராட்டப்பட்ட திரு: டட்லிக்குப் பதிலளிக்கும் பொறுப்பு இன்று அதே கொல்வின் மீதுதான் விழுந்தது.

இந்தச் சோடிப்பொருத்தத்திலுல்தான், இன்று இரண்டு மணிக்குஆரம்பித்த விவாதம், சுமார் 6-30 மணிவரை நேரம் போனதே தெரியாமல், வெகு விறுவிறுப்பாக நடைபெற்றது. அதன்பின்னர் உடுப்பிட்டி எம். பி. திரு. ஜெயக்கொடியும், கலாச்சார அமைச்சர் திரு. குலதிலகாவும் எட்டு மணிவரை விவாதத்தை

தடைசெய்வதோடு, நமது நாட்டு மக்களைச்சூறையாடவும் இப்படிப்பெறப்படும் பெருலாபங்கள், 'தேர்தல்களில் யூ. என். பிக்கு ஆதரவாகவும், சில வேளைகளில் எம். பிக்களை விலை கொடுத்து வாங்கவும்'' பயன்படுத்தப்படுவதாகவும் கூறினார் உதவிக் கைத்தொழில் அமைச்சர் திரு. சூரிய ஆராய்ச்சி

''முன்னைய ஆட்சியில் அங்கீகாரம் பெற்ற 40கைத்தொழில் களைப்பற்றி விசாரணை நடத்தியபோது அவற்றில் 16 கைத்தொழில்கள் எந்தத் தொழிற்சாலையுமோ வேலையாளுமோ இல்லாமல் பெயரளவில்தான் இருக்கின்றன, ஆனால் 21 லட்சத்துக்கும் மேற்பட்ட அந்நிய செலாவணி, இப்போலிக் கைத்தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன'' என்ற உண்மையையும் வெளியிட்டார் இவர்.

### டட்லி சேனநாயகா



நிதியமைச்சர் என். எம், தனது வரவு செலவுத்திட்டத்தை சமர்பித்துப் பேசிய போது, சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிதிக்கொள்கைகளைப் பற்றியும், அவற்றின் சாதக, பாதகங்களைப்பற்றியும் விரிவாக ஆராய்ந்தார். அப்படி ஆராய்ந்தபோது 1956 இல், 127கோடியே 57லட்சமாக இருந்த வெளிநாட்டுச் செலாவணி அதன்பின் வந்த நிதியமைச்சர் திரு. ஸ்டான்லி டி சொய்சா (காலஞ்சென்ற பண்டாரநாயக்கா[illegible] நிதியமைச்சர்) வின் காலத்தில் அவர்கடைப்பிடித்த 'குறுகிய காலப் பார்வையுடனு[illegible], பாவனைச் செலவினங்களால் விரையமாக்கப்பட்டு' 53 கோடியே [illegible]லட்சமாகக் குறைந்து விட்டது என்று குறிப்பிட்டார்.

டட்லி வல்லவரல்லவோ?

வது முறையும் அதற்கப்புறம் கடன் வாங்கும் ஒவ்வொரு முறையும் 'லெட்டர்ஸ் ஒவ் இன்டென்ட்' என்று சொல்லப்படும்உறுதி மொழிக்கடிதங்களைக் கொடுக்கவேண்டியது அவசியம்தன் என்று விளக்கிவிட்டு புதிய அரசாங்கம்கூட இதன்படி ஆட்சிக்கு வந்தபின் உலக வங்கியுடனான கடன் ஒப்பந்தங்களின் கீழ் இப்படியான உறுதிமொழிக் கடிதங்களை வழங்கியிருக்கின்றது. என்று

தீர்க்கப் பயன்படாதென்பது டட்லியின் வாதமாகும்

இறுதியாக யூ. என். பி. யின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான 'சியரட்ட' வின் பேரில் 4,39,950 ரூபாய் வங்கியொன்றில் போடப்பட்டது பற்றி அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஸ சுட்டிக்காட்டியதற்கு விளக்க அறிக்கை ஒன்றையும் வாசித்தார் டட்லி.

''எல்லாக் கட்சிகளையும் போல யூ என் பியும் தேர்

## வரவு - செலவுத்திட்ட விவாதம் 7-ம் நாள்

நிலைநாட்ட முற்பட்டபோது டாக்டர் என். எம். முக்கும், டட்லிக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஒன்று இடம் பெற்றது.

தனது அரசாங்கம் பதவியிருலிந்த போது ஜெர்மன் வங்கியுடன் செய்து கொண்ட கடன் ஒப்பந்தப்படி 7கோடிரூபா கிடைத்ததாகவும், அதில் தனது அரசாங்கம் 2 கோடி ரூபாவையே செலவழித்தது. மீதம் 5கோடிரூபாவும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சிலமாதங்களிலேயே செலவழித்துவிட்டது என்றும்குற்றம் சாட்டினார்டட்லி.

திரு. டட்லியின் 'செல்லப் பிள்ளை'யான 'பசுமைப் புரட்சி'யைப்பற்றிப் பேச முற்பட்டபோது 'கொல்' என்ற சிரிப்பொலி சபையில்எழுந்தவறவில்லை முன்னெப்போதும இல்லாத அளவுக்கு இம்முறை சொற்சாகுபடி நடந்திருக்கிறது. என்று புதிய அரசாங்கத்தின் வானொலி பறைசாற்றியதை டட்லியே காதுகுளிர கேட்டாராம். அந்தநிலையை அடையத் தனது திட்டங்கள் தான் உதவின[illegible] என்று டட்லி முற்பட்டபோது மின்னேரியா போன்ற நெல் விளையும் பிரதேசங்களில் பசுமைப் புரட்சியினுல் பயனடைந்தவர்கள் சாதாரண விவசாயிகளே. என்று சொன்[illegible]போது ''அப்படியானுல் சி. பி. டி. சில்வா தோற்றது ஏன்?'' என்று கேட்கத் தவறவில்லை

தல் பிரச்சாரச் செலவுகளுக்காக ஆதரவாளர்களிடமிருந்து நிதி உதவி பெற்றது. அப்படிப் பெறப்பட்ட நிதியில் செலவு போக எஞ்சியிருந்த பணமே 4,39,950 ரூபாய்; இதில் எந்தத் தில்லுமுல்லோ, திரைமறைவு வேலையோ நடைபெறவில்லை. அந்தப் பணத்தைத்தான் கட்சிப் பத்திரிகையின் பெயரில் போட்டோம்'' என்று கூறியது அந்த அறிக்கை.

### கொல்வினின் பதில் வாதம்

தேர்தல் முடிந்து சுமார் நாலரை மாதங்களுக்கு இந்தப் பணம் எங்கேயிருந்தது? சரி 4லட்சத்து 39ஆயிரத் 950 ரூபாய் என்று மட்டமாகத்தான் மிகுதித்தொகை இருக்கவேண்டுமா? அப்படியே இருந்தாலும் செல்லாக்காசு ஆக்கப்பட்ட 100 ரூபாய் 50 ரூபாய்த் தாள்களாகத்தான் இருந்திருக்குமோ? அரசியல் கட்சிப் பணம் வருமான வரியிலிருந்து விதிவிலக்குப் பெற்றதாகையால் அந்தக் கணக்கில்தான் இந்தப் பணம் போடப்படவேண்டுமா? என்பவை டட்லியைத் தொடர்ந்து பேசிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா எழுப்பிய பல சந்தேகங்களில் சிலவாகும்!



பணத்தை போட்ட அமைச்சர் அமர துங்காவின் விளக்

## சொல்லம்புகள்

டட்லி: நாங்கள் ரூபாயின் மதிப்பைக் குறைத்தோமென்றுல் நீங்கள் பதவிக்கு வந்தவுடன் ரூபாயின் மதிப்பைக் கூட்டுகிறதுதானே?

என். எம்: உமக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையே.

டட்லி; உமக்கும் பைத்தியம் பிடிக்கவில்லையே நாங்கள் குறைத்தால் நீங்கள் கூட்டுறதுதானே.

என். எம். பணத்தோடு-நாணயத்தோடு நாம் நினைத்தபடியெல்லாம் குரங்குச் சேஷ்டை செய்து கொண்டிருக்க முடியாது.

0 0 0 0

டட்லி: நமக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடொன்று மார்ச் மாதத்தில் பாரிஸில் நடைபெற்றது.

ரத்னபிரிய சேனநாயக்கா: நமது நாட்டை மேலும் 'அடகு' வைப்பதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த.

டட்லி: நீங்கள் பதவிக்கு வந்தபின் நாட்டை அடகு வைக்க ஏன் கையெழுத்திட்டீர்கள்?

என்' எம்: உமக்கு விஷயங்கள் தெரியாவிட்டால் 'நான்சென்ஸ் தனமாகக்கதைக்கவேண்டாம்

டட்லி: நான் விஷயங்களைத் தெரிந்து கொண்டு தான் பேசுகிறேன்.

என். எம்.: நீர் விஷயங்களைக் குழப்புகிறீர்.

டட்லி: நீங்கள் பதவிக்கு வந்தபின் உலகவங்கியின் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லையா?

என். எம்: நீங்கள் விட்டுச்சென்ற இலட்சணம் அப்படி, வேறு வழியில்லாமல் நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டியிருந்தது: நான் பேசும்போது நீங்கள் செய்துவிட்டுப் போனதையெல்லாம் சொல்லத்தான் போகிறன்.

டட்லி: நன்ருகச் சொல்லும்; தாராளமாகச் சொல்லும்.

என் எம்: நான் சொல்ல இருப்பவைகளைச் சொல்லி முடிக்குமுன் நீர் உமது இடத்தைவிட்டு ஓடிப் போய்விடுவீர்.

ஓர் உறுப்பினர், பயந்து ஓட வேண்டாம்; நாங்கள் பாதுகாப்பு தருகிறோம்.

டட்லி: மத்தியவங்கி அறிக்கையிலிருந்துபுள்ளி விபரங்களைக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனுல் இன்றைய நிதியமைச்சர் எத்தனையோ சந்தர்ப்பங்களிள் இதே அறிக்கையிலிருந்து புள்ளிவிபரங்களைக் காட்டி எங்களைத் தாக்கியிருக்கிறுர்.

கொல்வின் ஆர். டி' சில்வா: மத்தியவங்கி சுயேச்சையாக இயங்கிய காலங்களில் நானும்தான் அந்த அறிக்கைகளைப் பயன்படுத்தியிருக்கிறேன் ஆனுல் உங்கள் ஆட்சியின் குரங்குச் சேஷ்டைகளால் அவ்வறிக்கைகள் விகாரப்படுத்தப்பட்டவுடன் அவற்றில் நம்பிக்கை இழந்துவிட்டேன்.

டட்லி: இப்பொழுது உங்கள் ஆட்சிதானே இருக்கிறது. பிழையான தகவல் கொடுத்தவர்களைத் தண்டிக்கலாமே,

அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ச: இப்பொழுது அங்கே குரங்குகளும் இல்லை; அனுமானும் இல்லை (சிரிப்பு)

டட்லி: அண்மையில் வெளிநாடு சென்ற நிதி அமைச்சர் இதே அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசியுள்ளாரே.

டாக்டர் கொல்வின்: நாம் இங்கே எவ்வளவு தான் அடித்துக் கொண்டாலும் வெளிநாட்டில் நமது நாட்டின் கெளரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முக்கியமேயொழிய உங்கள் ஆட்சியின் குறைபாடுகளைக் காட்டுவதல்ல முக்கியம்.

0 0 0 0

டாக்டர் கொல்வின்: உலக வங்கியோடு, இந்த அரசாங்கமும், அதன் நிதியமைச்சரும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டு அவற்றில்கைச்சாத்திடத்தான் செய்வார்கள். ஆனுல் நாட்டின் தன்மானத்தை விலைகூறும் கட்டுப்பாடுகளை ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு கட்டுவதாயின் அதன் மூலம் கிடைக்கும் வருமானம் மூன்று சத வட்டியும் கட்டுபடியாகாது. அப்படி இருக்க பத்துசத வட்டியை அரசாங்கம் இக்கடனுக்கு வாங்குவதாயின், அது அவ்வூழியர்களைச் சுரண்டி, அவர்களை என்றென்றும் கடன்காரர்களாகவே வைப்பதாக இருக்கும்.

மேலும் வீடு கட்டுவதற்கான நிலத்துக்கு, அரசாங்க ஊழியர்கள் உள்ளிட்டு பொதுமக்கள் அதிக பணம் செலுத்தவேண்டியுள்ளது. சொந்தத்தில் நிலம் இருந்தால்தான், வீடு கட்ட கடனும் கிடைக்கும் நிலத்தின் விலையோ வரவர அதிகரித்துக் கொண்டே போகிறது, இதைத் தடுக்க அரசாங்கம் திடம் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்தால் அது எளிய பொதுமக்களுக்கும் அரசாங்க ஊழியருக்கும் பெரும் நன்மையாகும். அவசியமும் அவசரமுமான காரணங்களுக்காக, தங்கள் ஊழியருக்கு வட்டியில்லாக் கடன் அளிக்க அரசாங்கம் ஒழுங்குசெய்வதே முறை. இன்றையநிலையில் அது முடியாவிட்டால் வட்டி விகிதத்தை மிகக் குறைக்கவாவது வேண்டும். எப்படியும், வட்டிவிகிதத்தை மேன்மேலும் கூட்டிக்கொண்டு போகும் கொள்கை ஒரு சோஷலிஸ அரசாங்கத்துக்கு முறையாகாததுடன், பொதுமக்களுக்கும் விமோசனம் கிடைக்க வழியில்லாது அவர்களை என்றென்றும் கடன் படுகுழியில் ஆழ்ந்துகிடக்கச் செய்வதாக இருக்கும்.

## மனச்சாட்சிப்படி . . . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழ: எவ்வளவுகாலம் இருந்தீர்? - ஒரு வருடம்

வழ: அதுதான் கடைசித் தடவையா? - கடைசித் தடவைதான் நான் விலகியது.

நீதி: 3 தடவை தலைவராக இருந்தீர்? - ஆம்.

நீதி? ஒரு தடவை விலகினீர். ஆம்,

வழ: அது எந்தத் தடவை கடைசித்தடவை.

வழ: கடைசித் தடவை எவ்வளவுகாலம் தலைவராக இருந்தீர்? ஒருவருடம்

வழ: உமக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதா? - ஆம்'

வழ: எப்பொழுது? - முன்னர் என நினைக்கிறேன்.

வழ: நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபின்போட்டியிட்டீரா? இல்லை.

வழ: சபையில் எத்தனை அங்கத்தவர்? - 7பேர்.

வழ: 6 பேர் நம்பிகைகையில்லாத்தீர்மானத்தை ஆதரித்தனர்? - இருக்கலாம், ஞாபகமில்லை,

வழ; நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் காரணம் என்ன? காரணம் இல்லை சும்மா கொண்டுவந்தார்கள்,

வழ; நல்லதோ கெட்டதோ அவர்கள் காரணம் காட்டினார்களா? - இல்லை.

நீர் பட்டினசபை தலைவராகஇருந்தபோது மின்சார உற்பத்தியந்திரம் ஒன்றை சுப்பிரிண்டன் 40 000 ரூபாவாக மதிப்பிட்டபோது அதனை 55,000 ரூபா விற்கு வாங்க அனுமதியளித்ததாக உமக்கு எதிராக குற்றச்சாட்டு இருந்ததா? என்று மனுதாரின் வழக்கறிஞர் கேட்டபோது அழகக்கோன் 'அது உண்மையில்லை' என்று கூறினார்.

மன்னார் கோர்ட்டில் நடந்த வழக்கொன்றில் எதிரிக்கு அவர் இலங்கை பிரஜை என பத்திரம் வழங்கினிரா? என மனுதாரின் வழக்கறிஞர் கேட்டபோது அழகக்கோன் 'ஞாபகமில்லை' எனப் பதிலளித்தார். அந்த வழக்கில் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டாரா என மனுதாரின் வழக்கறிஞர் கேட்டபோது அழகக்கோன் 'ஞாபகமில்லை' என பதிலளித்தார்.

நேற்று நடைபெற்ற விசாணையின் மிகுதி விபரம் நாளை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

## மரண அறிவித்தல்

**சிவக்கொழுந்து வன்னியசிங்கம்**

காலஞ்சென்ற மலேசிய வன்னியசிங்கத்தின் அருமை மனைவியும் சுப்பிரமணியம், பாலசிங்கம், புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், சோமஸ்கந்தன், இந்தியன் எயர்லைன்ஸ் சண்முகம், ராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், வெற்றிவேலு தம்பிப்பிள்ளை(எஞ்சினியர்), திருமதி பிள்ளை (மலேசியா) ஆகியோரின் சகோதரியுமான சிவக்கொழுந்து வன்னியசிங்கம் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் 12-ந் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு கந்தர்மடம் அம்மன் வீதி 18-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்துக்குத் தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். 2151

இரண்டு மணிக்கு ஆரம்பித்த விவாதம், சுமார் 6-30 மணிவரை நேரம் போனதே தெரியாமல், வெகு விறுவிறுப்பாக நடைபெற்றது. அதன்பின்னர் உடுப்பிட்டி எம். பி. திரு. ஜெயக்கொடியும், கலாச்சார அமைச்சர் திரு. குலதிலகாவும் எட்டு மணிவரை விவாதத்தை இழுத்துச்சென்றனர்.

இன்று முதலாவது பேச்சாளர் உதவிக்கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். கே. கே. சூரிய ஆராய்ச்சி கடல் மடைதிறந்தாற்போல, தங்குதடையின்றி, புள்ளி விபரங்களோடு தனியார் துறையினரின் பல கைத்தொழில்கள் கடந்த பல ஆண்டுகளாக எப்படியெல்லாம் கொள்ளைலாபம் அடித்து வந்தனர் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.

சாதாரண உறுப்பினர்களுக்கு இல்லாத ஒரு வசதியும் வாய்ப்பும் அமைச்சர்களுக்கும், உதவி அமைச்சர்களுக்கும் உண்டு மற்றவர்களைவிட இவர்களுக்குப் பேச கூடுதலான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பது (அமைச்சர்களுக்கு 45 நிமிடம், உதவி அமைச்சர்களுக்கு 30 நிமிடம், சாதாரண உறுப்பினர் 20 நிமிடம்) ஒருபுறமிருக்க. அந்தரங்கமான பல தகவல்கள் அடங்கிய அரசாங்க பைல்கள் இவர்களிடம் அடைக்கலம்! தாங்கள் சொல்ல விரும்பும் விஷயங்களைத் தக்க ஆதாரங்களோடு கூற இந்த 'பைல்கள்' உதவுவதோடு அந்த 'பைல்கள்' சொல்லும் பல தில்லுமுல்லுகளையும், ஊழல்களையும், அம்பலப்படுத்தி தங்களது பேச்சுகளுக்கு விறுவிறுப்பையும் முக்கியத்துவத்தையும் அளிக்கவும் அவை உதவுகின்றன.

ஒரு கைத்தொழில்அதிபர் நூற்றுக்கு 127 சத விகிதம் லாபம் பெறுவதோடு தனக்கும், தனது மனைவிக்குமாகச் சேர்த்து 63 ஆயிரம் ரூபா சம்பளமாகவும் பெறுகிறாராம்;

சிங்கர் தையல்மிஷின்களை விநியோகிக்கும் நிறுவனம் 50 லட்சம் ரூபா முதலீடு செய்து ஒரே ஆண்டில் 20 லட்சம் ரூபா லாபம்பெற்று அதில் 13 லட்சம் ரூபாயை அமெரிக்க வங்கியொன்றில் போட்டிருக்கிறதாம்;

இதேசிங்கர் மிஷின்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையின் மூலதனம் 12 லட்சம்; 1968-69-ம் ஆண்டு கிடைத்தலாபமோ 21 லட்சம்!

இப்படியாகத் தனியார் துறையினரின்கைத்தொழில்கள் வியக்கத்தக்க அளவில் லாபங்களைப் பெற்று நமது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேறவிடாமல் (ன நிதியமைச்சர்) வின் காலத்தில் அலைகடைப் பிடித்த 'குறுகிய காலப் பார்வையுடனும், பாவனைச் செலவினங்களால் விரையமாக்கப்பட்டு' 53 கோடியே லட்சமாகக் குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டார்,

டட்லி வல்லவரல்லவோ? சிறுபுல் கிடைத்தாலும் விடுவாரா? திரு. ஸ்டன்லி டி சொய்சா, பதவிவகித்த ஆட்சியை- இப்போதைய அரசாங்கம் போற்றிப் புகழும் பண்டாரநாயக்காவின் ஆட்சியை- குறைகூறுமல்..ாவம், தனிமனிதனை. அன்றைய நிதியமைச்சர் திரு. ஸ்டான்லியை மாத்திரம் ஏன் குத்திச் சாட்டிக்குறை கூற வேண்டும் என்பது தான் 'என்னிடம் நன்றாக அகப்பட்டுக் கொண்டீர்கள்' என்ற தோரணையில் டட்லி கேட்ட கேள்வி.

'குறுகிய காலப்பார்வையுடனும், பாவனைச் செலவினங்களால் விரையமாக்கப்பட்டது 'என்ற சொற்றொடரை மீண்டும், மீண்டும் எடுத்துக் கூறி, பண்டாரநாயக்காவின் ஆட்சியை குறை கூறுமல் நிதிமந்திரியை மட்டும் சுட்டிக்காட்டுவது சரியல்ல என்று டட்லி வாதிட்டபொழுது;

ஒருஉறுப்பினர்: அந்த ஸ்டான்லி டி சொய்சாவைத் தானே உந்தோனேஷியாவுக்குத் தூதுவராகஅனுப்பினீர்? (சிரிப்பு) டட்லி: நான் தூதுவராக அனுப்பினேன், உங்கள் ஆட்கள் அவரைத் தானே அமைச்சர் ஆக்கினார்கள்.

### உலகவங்கி ஒப்பந்தங்கள்

இதன் பின்னர் டட்லியின் பேச்சு உலகவங்கியில் கடன் பெறும்போது கைச்சாத்திடவேண்டிய ஒப்பந்தங்கள் பற்றி திரும்பிய. மகாவலி கங்கை திசைதிருப்பும் திட்டம்மீதான விவாதத்தின போதும், பொதுத் தேர்தலின் போது, உலகவங்கியுடன் முன்னைய ஆட்சியினர் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றியும், அவற்றில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பற்றியும் ஏராளமாகப் பேசப்பட்டது. நிதியமைச்சர் என். எம். மும் தனது பேச்சின் போது யூ. என். பி ஆட்சியில் உலக வங்கிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டி மிக முக்கியமான பல கடிதங்களைப்படித்துக் காட்டினார். பெரும் பிரச்சாரத்துக்கு ஆளான இந்தக்கடிதங்களைப்பற்றி விளக்க முற்பட்டார் டட்லி.

"முதல் இரண்டு முறை கடன்பெறும்போது எந்த உறுதிமொழியையும் உலக வங்கிக்குக் கொடுக்க வேண்டியதில்லை; ஆனால் மூன்று டட்லி முற்பட்டபோது மின்னேரியா போன்ற நெல் விளையும் பிரதேசங்களில் பசுமைப் புரட்சியினால் பயனடைந்தவர்கள் சாதாரண விவசாயிகளே என்று சொன்னபோது "அப்படியானால் சி. பி. டி. சில்வா தோற்றது ஏன்?" என்று கேட்கத் தவறவில்லை மின்னேரியாவில் அவரைத் தோற்கடித்த ரத்னபிரிய சேனநாயக்கா!

வேலையில்லாத் திண்டாட்டத்தையும், உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவையும் இவ்வரவு-செலவுத் திட்டம் பலவை டட்லியைத் தொடர்ந்து பேசிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா எழுப்பிய பல சந்தேகங்களில் சிலவாகும்!



பணத்தை போட்ட அமைச்சர் அமரதுங்காவின் விளக்கத்தை அவர் கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால் நாங்களும் நம்பித்தான் ஆகவேண்டுமென்று யாரும் எண்ணக் கூடாது என்று வழக்கம் போலச் சுற்றிவந்து ஒரு போடுபோட்டார் கொல்வின்!

டட்லியின் வாதங்களைக் கிரிமினல் வழக்கறிஞருக்கு உள்ள இயற்கையான வாதத் திறமையோடு தவிடுபொடியாக்க முனைந்த டாக்டர் கொல்வின் "எந்தக் குற்றவாளியும்- கொலைக்குற்றவாளியும் வழக்கறிஞரிடம் வந்தவுடன் "ஐயோ நான் அங்கே நிற்கவும் இல்லை; ஒன்றையும் செய்யவும் இல்லை; எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கமுயலுவது போலத்தான். டட்லியும், உலக வங்கி ஒப்பந்தங்கள் பற்றி ஒன்றும் தெரியாது போல மூடிமறைத்துப் பேசுவதாகக் கிண்டல்செய்தார்.

"நாட்டின் மானத்தை விலைகூறும் எந்த ஒப்பந்தத்திலும் நாங்கள் கைச்சாத்திடமாட்டோம்" என்று அடித்துச் சொல்லிய கொல்வின் தனது ஆதரவாளர்களின் பலத்த கரகோஷங்களுக்கு இடையே "மகாவலி கங்கை திசை திருப்பும் திட்டத்துக்கு நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளுடன் கடன் வசதி கிடைக்காவிட்டால் நாடே ஒன்று திரண்டு; ஒருமுப்பட்டு உழைக்கும். தேவையானால்பட்டினியால் கிடந்து மடியவும் மக்கள் தயார்; ஆனால் நாட்டை ஒருபோதும் அடகுவைக்கமாட்டார்கள்" என்றார்.

## ஓய்வு பெறும் ஆசிரியர்

38 வருட ஆசிரிய சேவையின்பின் திரு சி. அப்புத்துரை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இருந்து நாளை தமது அறுபதாம் வயதில் ஓய்வு பெறுகிறார். சொந்தக் கிராமமாகிய நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் முதன் முதலாக ஆசிரியப்பணிபுரிய ஆரம்பித்த இவர் இக்கல்லூரியின் ஆரம்பகாலசிரேஷ்ட ஆசிரியர்களில் ஒருவராகப் பணிபுரிந்து கணிதம். புவியியல் ஆகிய பாடங்களைத் திறம்படக் கற்பித்து தம்மைப்போன்ற ஆசிரியர்கள் பலரையும் உருவாக்கினார்.

கல்வியோடு மட்டும் நில்லாதுதான் கற்பிக்கும் மாணவர்கள் கலை விளையாட்டுத் துறை என்பவற்றிலும்தேற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்தினார்.

ஆசிரியர் சங்கங்களிலும் மிகவும் ஈடுபாடுடைய இவர் வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தொடக்ககால உறுப்பினராகவும் இருந்தார். வலிகிழக்கு ஐக்கிய நாணயசங்க சமாசத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவரான இவர் சமாசத்தின் நிர்வாகஸ்தராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தார்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை பூரண வளர்ச்சிபெற்ற கல்வி நிலையமாகப் பரிணமிக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஆசிரியப் பெருமக்களில் இவரும் ஒருவராவர். அன்பு தவழும் முகமும் அருள் ஒழுகும் பார்வையும், அடக்க சுபாவமும், எடுப்பான புருடோத்துவமும் சக ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவர்பால் ஈர்க்கச் செய்தன.

ஆசிரியர் உலகத்துக்கோர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெரியாரை நீர்வேலியும் உரும்பராயும் கல்வியில் கரிசனையள்ளவரையும் கருத்திற்கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை.

— —

கோலாலம்பூர், நவ.9

கோலாலம்பூரில் ஆயிரக்கணக்கான தவளைகள் சண்டைபோட்டுக் கொண்டன, இந்தச் சண்டையைப் பலர் மிகவும் கவலையுடன் பார்த்தார்கள். பல தவளைகள் இதில் மாண்டன.

தவளைகள் சண்டை பிடிப்பதில்லையாம். நாட்டுக்குக் கெடுகாலம் ஏற்படும்போதுதான் இப்படி தவளைசண்டை பிடிக்குமென மலேஷிய பெரும்பான்மைமக்கள் நம்புகிறார்கள்.

தான் அடித்துக் கொண்டாலும் வெளிநாட்டில் நமது நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முக்கியமேயொழிய உங்கள் ஆட்சியின் குறைபாடுகளைக் காட்டுவதல்ல முக்கியம்.

0 0 0 0

டாக்டர் கொல்வின்: உலக வங்கியோடு, இந்த அரசாங்கமும், அதன் நிதியமைச்சரும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டு அவற்றில்கைச்சாத்திடத்தான் செய்வார்கள். ஆனால் நாட்டின் தன்மானத்தை விலைகூறும் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டு கையெழுத்திடமாட்டார்கள். திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நிதியமைச்சராக இருந்த காலத்தில் அரிசி ரேஷனை வெட்ட வேண்டும் என்று உலகவங்கி கேட்டபோது அதை அமுல் நடத்த எங்கள் பிரதமர் (திருமதி பண்டாரநாயக்கா) மறுத்துவிட்டார். உங்கள் பிரதமர் அதனை ஏற்று அமுல் நடத்தினார். இதுதான் உங்கள் பிரதமருக்கும் எங்கள் பிரதமருக்கும் இடையில் உள்ள மிக முக்கியமான வித்தியாசம்

0 0 0 0 0

டாக்டர் கொல்வின்: முட்டையை உடைக்காமல் 'ஓம்லட்' செய்ய முடியாது. அதைப்போல முதலாளித்துவ முட்டைகளை உடைக்காமல் சோஷலிஸ 'ஓம்லட் செய்ய முடியாது.

அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஸ: முதலாளித்துவ முட்டைகளை மாத்திரமல்ல மண்டைகளை உடைக்க வேண்டியிருக்கும்

0 0 0 0

டாக்டர் கொல்வின்: அரிசி ரேஷனைக் குறைக்கிறேன் என்று 1965 ஜூலையில் உலக வங்கிக்கு ஒப்புதல் அளித்துவிட்டு 1966 நவம்பர்வரை அருமையான பொம்மலாட்டம் ஒன்றை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு உலக மார்க்கட்டில் அரிசித் தட்டுபாடு என்ற பேர்வையில் அரிசி வெட்டை அமுல் நடத்தினார்கள்.

0 0 0

டாக்டர் கொல்வின்: எந்த அறிவாளியும் பின்பற்றக் கூடிய புத்திசாலித்தனமான வழி இப்போது எங்கள் பக்கம்வந்து சேர்ந்துவிடக்கூடியதுதான் 0 0 0

எஸ். கே. கே. சூரிய ஆராய்ச்சி (உதவிக் கைத்தொழில் அமைச்சர்): "பிரிட்டன் போன்ற வெளிநாடுகளில் எல்லாம் எந்தக் கைத்தொழிலும் நூற்றுக்கு 15 அல்லது 20 சத விகிதத்திற்கு மேல் லாபம் பெற விடுவதில்லை" நமது நாட்டிலோ, அப்படியான கைத்தொழில்கள் நூற்றுக்கு 165சத விகிதம், 172 சத விகிதம், 145 சதவிகிதம் லாபம் பெற அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது: இதை இப்படியே விட்டுக்கொண்டு போனால் இலங்கையிலுள்ள எம்மையெல்லாம் எருமைமாடுகள் என்றல்லவா வெளிநாட்டவர்கள் நினைத்துக் கொள்வார்கள்!

சூரிய ஆராய்ச்சி: இந்த நாட்டில் இதுவரை எந்தப் பிரதம அமைச்சரும் செய்யாத தியாகத்தை எங்கள் பிரதம அமைச்சர்தான் செய்திருக்கிறார்; தன்னுடைய நிதி அமைச்சர் விதித்துள்ள சொத்து மூலதன வரியால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, மிக அதிகமான வரி செலுத்த வேண்டியவர் அவர்தான். நாட்டின் நன்மைக்காக இதைச் செய்யத் தயங்காமல் முன்வருகின்றார். (கைதட்டல்)

0 0 0

கே. ஜெயக்கொடி உடுப்பிட்டி: தேர்தலின் போது, தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் வடக்கிலே எங்களுடன் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரசை யூ. என். பி. யின் வடக்கு மாகாணக் கிளையென்று பிரச்சாரம் செய்தோம்; கிழக்கிலே யு. என். பி. யுடன் போட்டியிட்டோம். தேர்தல் முடிந்து வெற்றிபெற்று இங்கு வந்தவுடன் எங்களை அரசாங்கக் கட்சி எம். பிக்கள் யு என். பி. யுடன் சேர்த்துப் பேசுவது எங்களுக்கு வேதனையளிக்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org